தனிப்பிரதி 1 அணா ஆண்டு சந்தா ரூ. 5. **REGD. NO. M. 4455.**

# திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்.
C. N. அண்ணாதுரை M. A.,

"தமிழுண்டு தமிழ்மக்க ளுண்டு—இன்பத்
தமிழுக்கு நாளும்செய்வோம் நல்ல தொண்டு"
[கவி பாரதி தாசன்]

S. பரமசிவம்

மலர் 1. || காஞ்சிபுரம் 7—6—42 சித்திரபானு—வைகாசி 25—ஞாயிறு || இதழ் 14

# பாகிஸ்தான்!
# 24-ஆண்டுகளுக்கு முன்பு!!

பரதன்.

கூண்டிலடைபட்ட பஞ்சவர்ணக்கிளிக்கு, பழமுதிர்சோலை, பசும்புற்றரைக் கடுத்த பரிமளச்சாலை, பழய கட்டிடத்தின் சாளரம், தளிர், பூ, செங்கனி, ஆகியவற்றின்மீது தானேகருத்து இருக்கும்! சிறகை அடித்தடித்து கூண்டுக்குள் பறந்துவிழும் தத்தை நித்தநித்தம் தான் பிடிபடுமுன் குலவிய இன்பக்காட்சிகளைக் காணவேண்டுமே என்பதை எண்ணியே ஏங்கும். கொவ்வைக்கனியும் சுவைமிகு பண்டமும் தந்து, பாவையர் அதனெதிர் நின்று முல்லைச்சிரிப்புடன் கொஞ்சிடினும், கிளியின் கருத்து அந்தக்காட்சியிலே இலயிக்காது, பழய நினைவுகொண்டு பதறும், துடிக்கும், விடுதலை என்றோ என்று ஏங்கும். துஷ்டமிருகங்களோ கூட்டிலடைபடினும், காட்டிலே உலவிக்கண்டபடி போரிட்டு, இரத்தத்தைக்குடித்து வெறிபிடித்தாடியதை எண்ணியும், எதிரே தோன்றுவோர்மீது பாய்வதற்கின்றி பாழான இரும்புக்கம்பிகள் தடைசெய்கின்றனவே என்று கலங்கியும் பற்களைக்காட்டி வாலைச்சுழற்றி அடித்து, வளைந்தும் நிமிர்ந்தும் ஓடியும் உலவியும், தமது குரூரகுணத்தையே காட்டும். தையலர் மகிழ்ந்திடும் தத்தையும், மானிடர் மருண்டிடும் கொடுமை செய்யும் துஷ்டமிருகங்களும் இங்ஙனம் கூண்டிலடைபட்டபோது இருக்கும். நரியின் நிலை எனில்! கூண்டிலிருக்கையில் தந்திரத்தால், வஞ்சனையால், தான் வலிவுள்ள மிருகங்களையும் ஏய்த்து பாடுபடாது ருசியுள்ள இறைச்சியை உண்டு மகிழ்ந்ததை எண்ணி ஏக்கமுற்று, சூதும் பசியும் சுடர்விடும் கண்களுடன், பரமசாதுபோல் பாசாங்கு செய்துகொண்டு, "என்னை ஏனோ வீணுக்குச் சிறையிலேயிட்டீர்கள். நான் என்ன கொடுமை செய்யவல்லேன். எளியேனைச்சற்றே வெளியே விடுமின்" என்று கெஞ்சுவதுபோல், கூண்டுக்குவெளியே நிற்போரை நோக்குவதைக் காணக்கூடும். சிறையிலே அடைபட்ட மிருகங்களின் சிந்தனையும் செயலும் இருக்கட்டும், மனிதர்களின் நினைப்பும் நடவடிக்கையும் எப்படி இருந்திருக்கும்.

அமாவாசை! சிறுதூறலும் பெய்கிறது! அந்த நேரத்திலே, சிறையிலே இருக்கும் கருப்புக்குல்லாயின் கவனம், தோட்டத்தில் புகுந்து, தூறல் சந்தடியோடு கலந்து சுவரேறிக் குதித்து, கன்னமிடும் செயலிலேதானே போகும்! முடிச்சவிழ்ப்பவனோ, தூறல் வந்துவிட்டதால் துரிதமாக நடந்து வீடு செல்வோமென்று செல்வோரைப், பின்தொடர்ந்து மெல்ல மோதி, முடிச்சை அவிழ்க்க இது சரியான சமயம் என்ற எண்ணமே கொள்வான். அரசியற்கைதிகளோவெனில், "அடுத்த ஆறும்மாதம் விடுதலை, அதற்கடுத்த ஆறும்மாதம் ஜில்லாபோர்டு மெம்பர்ஸ்தானம் நமக்குத்தான் கிடைக்கும்" என்ற மனப்பால் குடிப்பர்! மாஜிமந்திரிகள், மீண்டும் மந்திரிகளாகும் மார்க்கம் வகுப்பர்! மாசுநீக்கிக்கொள்ள மக்களிடமிருந்து தலைமறைவாகச் சின்னாட்கள் இருந்துவிட்டால், மீண்டும் புகழுடன் விளங்கலாம் என்று எண்ணுபவருண்டு. இந்த ஆறுமாதகாலத்திலே, இன்னின்னாரைப்பிடித்து இத்தனை இத்தனை "கண்டிராக்டுகளை" எடுத்துப் பணம் திரட்டிவிட்டிருப்போமே, அது கெட்டுவிட்டதேஎன்று மனக்குறைபட்ட மகானுபவர்கள் எனக்குத்தெரியும். மருந்துக்கடை நிலைமை, மளிகைக்கடை நிலைமை, புத்தக வியாபாரநிலைமை, புதுக்கம்பெனி நிலைமை முதலியவற்றினைப்பற்றியே எண்ணிக்கொண்டு, பாரதமாதா, சுயராச்யம், காங்கிரஸ், முதலியவற்றைப்பற்றியும் எண்ணாதிருந்த எத்தனையோ காங்கிரஸ் சிறைபுகுந்தோரைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் சிலர், சிறைச்சாலையைப், படிப்பகமாக்கியுள்ளனர். ஆச்சாரியார், இராமயணத்தைப்படித்துப்படித்து ரசித்தது அங்குதான். பெரியார் ஜஸ்டிஸ் கட்சிக்குத்தமது வேலைத்திட்டத்தைத் தயாரித்தது சிறைச்சாலையிலேதான். புதிய பாஷைபயில, புதியபுத்தகம் படிக்க, புது உறவுகொள்ள, புதுப்பழக்கம்பெற, பலருக்குச் சிறைச்சாலை, ஆரம்பப்பள்ளியாக இருந்திருக்கிறது. சிறைச்சாலையிலே இருந்து, உலகுக்கு நன்மையும், நம்மவர் உள்ளத்திற்கு மகிழ்ச்சியும் தரும் உன்னதமான காரியத்தை ஒருவீர இஸ்லாமியத்தோழர் செய்ததுபற்றிய சிறு குறிப்பை முஸ்லீம்லீகின் ஆங்கில வாரத்தாளாகிய டான் Dawn பத்திரிகையிலே நான்படித்துப் பரமானந்தமடைந்தேன். நீங்களும் மகிழ்வீர்கள் என்றே அதனையும் அது எழுப்பும் எண்ணங்களையும் உங்களுக்குக் கூறுகிறேன்.

டோராடன் சிறை,
22-8-41.

அன்புள்ள அட்லி அவர்களே!

இத்துடன் இணைத்துள்ள கடிதத்தைத் தாங்கள் படித்துவிட்டு, சர்வதேச சமதர்ம சங்கத் தலைவரும், பெல்ஜிய நாட்டுப்பிரமுகரும், தற்போது பிரிட்டனில் உள்ளவருமான தோழர் **காமிலி ஹ்யூஸ்மான்ஸ்** அவர்களிடம் சேர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். பிரிட்டிஷ் சர்க்கார், மிஸ்டர் அமெரி, ஜனுப் ஜின்னு ஆகியவர்களின் நிலைமையை உள்ளபடி தெளிவாக்க இதனைத் தெரிவிக்கிறேன். இந்தியாவிலுள்ள தனித் தனி பிரதேசங்களும் தத்தமக்கு ஏற்றதான அரசியல் அமைப்பை ஏற்படுத்திக்கொள்ள அனுமதிப்பதே, இந்தியப் பிரச்சனையைத் தீர்க்கும் வழியாகும்.

இங்ஙனம்

**மகமத் அப்துஸ் சத்தார் கெயிரி.**

*  *  *  *

1941-ம் ஆண்டு, ஆகஸ்ட்டு மாதம் 22ந்தேதி டோராடன் சிறைச்சாலையிலே, மேற்படி கடிதத்தை எழுதினர் ஜனுப் மகமத் அப்துஸ் சத்தார். அவர்பேராசிரியர், பலநாட்டுமனவளமறிந்தவர், சமதர்மி, M, A. PH D, பட்டம் பெற்றவர், ஐரோப்பாவில்சென்றிருந்து நேரடியாக அம்மக்களின் நினைப்பையும், நிலைமையையும்கண்டறிந்தவர். சமதர்மத்தின் பொருட்டே சிறைபுகுந்தவர். சிந்தனையைச் சிறைச்சாலை என்னசெய்யும்? இரும்புக் கம்பிகள், இருதயத்தை மாற்றிவிடாதன்றோ! சிறைப்பட்ட சிலர், வெளியேஉள்ள மக்கள், விஷமப் பிரசாரமெனும் வெஞ்சிறையில் கிடந்துழலுவதுகண்டு உளம் வெதும்பி, இக்கடிதத்தை விடுத்தார்.

ஜனுப் ஜின்னு பேசும் பாகிஸ்தான், ஓர் பிரிட்டிஷ் சிருஷ்டி! என்று ஆச்சாரியார் உள்பட காங்கிரஸ் வாதிகள் அனைவரும் கர்ஜனை புரிகின்றனர். பத்திரிகைகளோ, இந்த விஷமத்தனமான பொய்யை, அலங்காரத்தோடு வெளியிட்டு, ஆணவத்தோடுஆர்ப்பரிக்கின்றன. பாமர மக்களோ, பாகிஸ்தான் பிரிட்டிஷ் சூழ்ச்சிதான் போலும் என்று கருதி மனம் புழுங்குகின்றனர். ஜனுப் ஜின்னுவை, நாக்கைப் பறையாக்கி நடமாடும் பேர்வழிகள் தூற்றுகின்றனர். இத்தகைய இரைச்சல் வெளியே! உள்ளே, சிறையில் இருந்த ஜனுப் சத்தாருக்கு, இந்த இழிந்த பிரசாரம் எரிச்சலை உண்டாக்கிற்று. ஜனுப் ஜின்னுமீது வீண்பழி சுமத்துபவர்மீது கோபம் கொதித்தது. பிரிட்டிஷார் சிருஷ்டித்தது இந்தப் பாகிஸ்தான் திட்டம் என்ற பெரும் புளுகு பேசிடுவோரின் போக்கிரித்தனத்தைப் போக்க விரும்பினர். அதற்காகவே இருகடிதங்கள் விடுத்தார். ஒன்று பெல்ஜிய நாட்டவரும் பிரபல சமதர்மியுமான **காமிலி ஹ்யூஸ்மான்ஸ்** என்பாருக்கு. மற்றொன்று, அந்தக் கடிதத்தை அவரிடம் சேர்க்குமாறு மிஸ்டர் C. R. அட்லி அவர்களைக் கேட்டுக்கொண்டு எழுதப்பட்டது. அட்லி அவர்களுக்கு அனுப்பிய கடிதமே நான் முதலில் குறிப்பிட்டது. அத்துடன் இணைக்கப் பட்டிருந்ததும், காமிலிக்குத்தரப்படவேண்டுமென்று குறிக்கப்பட்டதுமான மற்றோர் கடிதத்தின் சாரத்தைக் கீழே காணவும்.

*  *  *  *

அன்பரே! ஹியூஸ்மான்ஸ்!

இருபத்துநான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்தவோர் சம்பவத்தைத் தாங்கள் நினைவில் நிறுத்தியிருக்கிறீரோ யாதோ நானறியேன்.

கடந்த ஜெர்மன் சண்டையின்போது, சமாதானம் ஏற்படுமென்ற எண்ணம் எழுந்தபோது, சர்வதேச சமதர்மிகள் கூட்டம் **ஸ்டாக்கோம்** நகரிலே நடைபெற்றது. அது போது நீரே, அந்தச்சமதர்மிகள் கழகத்தின் பொதுக்காரியதரிசியாக இருந்தீர். 1917ம் ஆண்டு. செப்டம்பரோ அக்டோபரோ, நினைவிலில்லை. இந்திய நாட்டபிமானிகள் கழகத்தினரான இரு இந்தியர்கள், உம்மைக்கண்டு கலந்துரையாடினர். நீர், அவர்கள் பேச்சை அக்கரையுடன் கேட்டுவிட்டு, "உமது கருத்தைத் தெளிவாக, எழுதிக்கொடும்" என்றுரைத்தீர். சின்னாட்களுக்கெல்லாம், நீர் கேட்டபடியே, அவர்கள், இந்தியப்பிரச்னையைத் தீர்க்க வழியாது என்பதுபற்றி எழுதித்தந்தனர்.

**இந்தியாவை. முஸ்லீம் இந்தியா இந்து இந்தியா என்று இரண்டு அரசுகளாகப்பிரித்து அமைக்கவேண்டும்** —என்பதே அவர்கள் எழுதித்தந்த திட்டம். தாங்கள் அதுபோது அந்தத்திட்டத்தைக்கண்டு ஆச்சரியமுற்றீர். நினைவிற்கு வரும் என்று நம்புகிறேன்.

இந்தியாவைப்பிரித்து வைத்து ஆளவேண்டும் என்ற சூட்சிகரமான கருத்தோடு, பாகிஸ்தான் திட்டத்தைப் பிரிட்டிஷார், ஜனுப் ஜின்னுவுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள் என்று இங்கு பேசப்பட்டு வருகிறது, இது ஓர் அபாண்டம், பெரும் புளுகு!

இதனைத்தாங்கள் விளக்கிவிட்டால், வீணுகவளர்ந்துள்ள ஓர் தப்பபிப்பிராயம் அகற்றப்பட்டுவிடும்.

இங்ஙனம்

**அப்துஸ் சத்தார்.**

இந்தக்கடிதத்தை மிஸ்டர் அட்லி படித்துவிட்டு, தோழர் காமிலிக்கு அனுப்பிவிட்டு, கீழ்க்காணும் கடிதத்தை ஜனுப் அப்துஸ் சத்தாரிக்கு அனுப்பினர்.

11 டவுனிங்தெரு
**ஒயிட்ஹால்**
5—1—42.

அன்புள்ள பேராசிரியர் கெயிரி அவர்களே!

தோழர் காமிலி ஹ்யூஸ்மான்ஸ், தங்களுக்கும் தங்கள் சகோதரருக்கும் அனுப்புமாறு இக்கடிதத்தை எனக்கு அனுப்பியுள்ளார். பெற்றுக்கொள்க.

இங்ஙனம்

C. R. அட்லி.

*  *  *  *  *

மிஸ்டர் அட்லிமூலம், ஜனுப் அப்துஸ் சத்தாரிக்கு தோழர் காமிலி அனுப்பிய கடிதம் இதோ. காணவும்.

லண்டன்
**5, ஹோபார்ட்பிளேஸ்**
30—12—1941.

எனதருமை மந்திரியாரே,

இந்தியப் பிரதிநிதிகள் இருவர் விடுத்த கடிதத்தை எனக்கு அனுப்பினமைக்கு வந்தனம். அவர்கள் இருவரும், என்னைச் சந்தித்துப்பேசியது எனக்கு நன்றாக நினைவிலிருக்கிறது. பிரன்ச்சுமொழியில், நான், அவர்கள் குறிப்பிடும் **ஸ்டாக்கோம்** மாநாடு பற்றி எழுதியுள்ள புத்தகத்தில் 407-408ம் பக்கங்களில், அவர்கள் பேச்சு, திட்டம் ஆகியவற்றின் சுருக்கத்தைக் காணலாம்.

**இந்தியாவை முஸ்லீம்நாடு. இந்துநாடு என்று இருபிரிவுகளாக்கவேண்டும் என்றுதான் அவர்கள் திட்டத்திலே கண்டிருக்கிறார்கள்.** அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பது உண்மையே.

நான் அந்தத்திட்டத்தைக்கண்டு ஆச்சரியமடைந்ததாக அவர்களுக்குத் தோன்றிற்று, ஆனால் நான் ஆச்சரியமடையவில்லை. நான், இந்தப்பிரச்னை, ஐரோப்பாவில் காணப்படும் சில பிரச்னையோடு ஒப்பாக இருப்பதைக்கண்டு மட்டுமே ஆச்சரியமுற்றேன்.

(11ம் பக்கம் பார்க்க)

அறிவியற் பகுதி

# இந்துமதமுந் தமிழரும்

முன் தொடர்ச்சி.

[ நக்கீரன். ]

திருஞான சம்பந்தர் என்ற பார்ப்பனச் சிறுவனுக்கு அவனுடைய மூன்றும் ஆண்டிலேயே, பரமசிவன் தமதருமை மனைவியாராகிய உமையம்மையாரோடு இடபத்தின்மீது ஏறிவந்து வான்வெளியிலே நின்றுகொண்டு சீர்காழியிலே ஒரு குளக்கரையிலே அழுதுகொண்டிருந்த அச்சம்பந்தரை உமையம்மைக்குச் சுட்டிக் காட்டி, "அதோபார் நமதருமைப் புதல்வன் பசியால் வாடி அழுதுகொண்டு நிற்கின்றான்; உனது முலைப்பாலை ஒருபொற்கிண்ணத்தில் கறந்துகொண்டு போய்க் கொடுத்து அவனுடைய பசியை ஆற்றி வா" என்று பரமசிவன் சொல்ல உமையம்மையும் அங்ஙனமே செய்ததாகப் பெரிய புராணம்கூறும் பல புதுமைகளில் ஒன்றாகிய இந்நிகழ்ச்சியைப் படித்த அல்லது கேட்ட ஒரு பகுத்தறிவாளன், இந்நிகழ்ச்சியை அப்படியே நம்பி மகிழும் ஒரு கடவுளன்பனை நோக்கி, அப்பனே! அரனடிமறவாத அன்பனே! சிவப்பழப்பெரும் பொருளைச் செம்மையாய் வழிபடும் சீலனே! சிவபெருமானுடைய கட்டளையை மேற்கொண்ட உமையம்மையார் தமது முலைப்பாலைக் கறந்து அதனை ஒரு பொற்கிண்ணத்தில் பெய்து திருஞானசம்பந்தருக்குக் கொடுத்ததை நீர் நேரில் பார்த்தீரா? அல்லது பெரிய புராணம் பாடிய சேக்கிழார்தான் பார்த்தாரா? அல்லது **சேக்கிழார்** பெரியபுராணம் பாடுவதற்குக் கருவியாக இருந்த கலித்துறைத் திருவந்தாதியைப் பாடிய **நம்பியாண்டார் நம்பி**யாவது பார்த்தாரா? அல்லது நம்பியாண்டார் நம்பிக்குப் பெரிய புராணக் கதைகளைச் சொல்லியதாகச் சொல்லப்படும் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாராகிய கல்லுப்பிள்ளையார்தான் பார்த்ததா? என்று கேட்டால், "நீ ஒரு நாத்திகன்; உன்முகத்திலும் முழிக்கப்படாது; நீ கடவுள் இல்லை என்று சொல்லும் கூட்டத்தைச் சேர்ந்தவன்; 'குடியரசு'—விடுதலை—'பகுத்தறிவு' படிப்பவன்போல் தெரிகிறது; உன்கேள்வி அடாவடியான கேள்வி; உனக்கு நான் விடைசொல்லப் போவதில்லை; அப்பாலே போ!! என்று சொல்லிவிடுகிறான் அந்தக் கடவுளன்பன்.

நான், நீர் சொல்லுகிறபடி, ஒரு நாத்திகன் என்பதும் உண்மையே. கடவுள் இல்லை என்று சொல்லும் கூட்டத்தைச் சேர்ந்தவன் என்பதும் உண்மையே. 'குடிஅரசு—விடுதலை பகுத்தறிவு, படிப்பவன் என்பதும் மறுக்கமுடியாத உண்மைதான். ஆனால், பகுத்தறிவுக்கும் இயற்கைக்கும் பொருத்தமான எதனையும் யார் சொன்னாலும், எந்தச் செய்தித்தாள் வெளியிட்டாலும், எந்த நூலில் படித்தாலும் அவற்றை உளமுவந்து ஒப்புக்கொள்ளும் இயல்பும் உடையவன் என்பதையும், உம்மைப்போல், "ஆ, இவன் நாத்திகனா? இவன் முகத்தில் முழிக்கப்படாது. இவன் கடவுள் இல்லை என்று சொல்லும் கூட்டத்தைச் சார்ந்தவனா? இவனுடன் பேசவுங் கூடாது. இவன் குடியரசுபடிப்பவனா? இவனோடு சேர்ந்தால் குடியே முழுகிவிடும்" என்று எண்ணும் குறுகிய மனப்பான்மை உடையவன் அல்ல என்பதையும் உமக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நிற்கச்,சில நாட்களுக்குமுன்,நான் காஞ்சியிலிருந்து புறப்பட்டுத்,தேர்க்காலிற் பட்டிறந்த ஒருபசுவின் கன்றுக்காக, அத்தேரை ஓட்டிச்சென்ற தன் புதல்வனை அத்தேர்க்காலிற் போட்டுக் கொன்ற சோழமன்னனுக்குக் காட்சி கொடுத்து, இறந்த கன்றையும், அரசமைந்தனையும் அமைச்சனையும் உயிர்பெற்று எழச் செய்ததாகப் பெரிய புராணத்திற் பேசப்படும் தியாகராயப் பெருமானாகிய சிவன் வாழும் திருவாரூருக்குப் போயிருந்தேன். அப்பொழுது, அப்பெருந்தகைத் தியாகராய சிவம் ஏறிவந்த தேர் அச்சுமுறிந்து தெருவிற் கிடைப்பதையும், அச்சுமுறிந்து தெருவிற் கிடக்கும் அந்தத்தேருக்குள் தியாகராய சிவமும் கிடந்து துன்பப்படுவதையுங் கண்ட யான், அங்குள்ளவர்களை நோக்கி, இதென்ன காலவேற்றுமை! உலகிலுள்ள அனைவருடைய துன்பங்களையும் போக்கிஅவர்களுக்கெல்லாம் நலமளிக்கும் நயனங்கள் மூன்றுடைய பெருந்தகைச்சிவம்இங்ஙனம் தனக்கேற்பட்ட இடரைக் களைய முடியாது தெருவிற்கிடந்து தவிப்பது ஏனோ என்று கேட்டேன். அதற்கவர்கள், எல்லாம் வல்ல எங்கள் சிவனுக்கு ஏற்பட்ட சீற்றமே தேரைச்சிதைந்தொடியும்படி செய்தது என்றார்கள். நான், அவர்களை மிகவும் பணிவுடன் நோக்கிச், சிவனுக்குச் சீற்றம்எப்படி உண்டாயிற்று? எதற்காக உண்டாயிற்று? யார் பேரில் சீற்றம்? இவ்வூரவர்கள் மீதா? இந்தியாவை நோக்கிப் படையெடுக்க முயற்சிக்கும் சப்பானியர்மீதா? இந்தியாவுக்குச் சுயராச்சியம் வழங்க மறுக்கும் ஆங்கிலர் மீதா? அல்லது இந்தியாவைத் துண்டாடிப் பிரிவினைகேட்கும் முஸ்லீம்களுக்கு ஆதரவாக நிற்கும் அன்பர் இராசகோபாலாச்சாரி மீதா? அன்றித், திராவிட நாட்டுப் பிரிவினைக்காகப் பெருங்கிளர்ச்சி செய்துவரும் எங்கள் தலைவர் இராமசாமிப் பெரியார் மீதா? ஒருவேளை, கடவுளே இல்லை என்று சொல்லும் எம்மனோர் மீதா? யார் மீது? எதற்காக? அந்தச் சிவன் சீற்றங்கொண்டார்? சிவனுக்குச் சீற்றம் ஏற்பட்டதென்பது எப்படித் தெரிந்தது? கடவுளை நீங்கள் நேரில் பார்த்தீர்களா? அல்லது கடவுள் தானாகவேவந்து எனக்கேற்பட்ட சீற்றங்காரணமாக நானே தேரச்சை முறியும்படி செய்தேனென்று செப்பினாரா? அன்றி எழுத்து மூலமாய்த் தெரிவித்தாரா? என்பன போன்ற கேள்விகளைக் கேட்டேன், நான் இங்ஙனம் பேசியதைக்கண்ட அவ்வூர்க்கடவுளன்பர்கள், ஓகோ! நாம் என்னவோ என்றெண்ணினோம்; இவன் ஒரு வடிகட்டிய நாத்திகன்; இவனோடு பேசுவதை அந்தச் சிவன் அறிந்தால் இன்னும் பாக்கியுள்ள தேரச்சுகளையும் முறித்துவிடுவார்; ஆகையால் இவன் முகத்தில்கூட முழிக்கப்படாதென்று சொல்லிக் கொண்டே, மெதுவாக, ஒவ்வொருவராக என்னை விட்டு நழுவத்தொடங்கினார்கள். ஒருசிலர் மட்டும் என்னை முறைத்துப்பார்த்துக்கொண்டே நின்றார்கள். நான் அவர்களைநோக்கி ஐயன்மீரே! அரனடிதொழும் அன்பர் குழாங்களே! சீற்றத்தை ஒழிமின்! சிறிதே பகுத்தறிவைப் பயன்படுத்தி யான் கூறும்செய்திக்குச் செவிசாய்மின்! என்ற பணிவான பீடிகையோடு பேசத் தொடங்கினேன். நான் இவ்வாறு பேசுவதைக் கேட்டால் மட்டும் என்னை நாத்திகன் என்கிறீர்களே! நான் கேட்கவில்லை, குடியரசு குறிக்கவில்லை, விடுதலை விளம்பவில்லை, பகுத்தறிவு பகரவில்லை, ஆனால், உங்கள் '**தினமணி**' நான் கேட்கும் இந்தக் கேள்விகளையே கடந்த 21—5—42-ல் கேட்டிருக்கிறதே, அதற்கென்ன சொல்லுகிறீர்கள் என்றேன். நான் இங்ஙனம் கூறியதைக் கேட்டதும் ஒரு காங்கிரசன்பன் என்முன்னே வந்து, தினமணியாவது நாத்திகம் பேசுவதாவது, நீ கூறுவது சுத்தப்பொய் என்று என்மீது பொரிந்து விழுந்தார். நான் உடனே, என்னிடமிருந்த தினமணியை அவரிடம் கொடுத்து, நீரே படித்துப்பாரும் என்றேன். அவர் தினமணியை

(10-ம் பக்கம் பார்க்க)

# குமஸ்தாவின் பெண்தான்

அல்லது

## கொலைகாரியின் குறிப்புகள்

—— சௌமியன் ——

முன்பு:— [கள்ளக் காதலனைக் கொன்று தூக்குத்தண்டனைபெற்ற தாந்தாவின் வரலாறு அவள் எழுதிவைத்த "டைரி" மூலம் தெரியவருகிறது. அதில், அவளது ஆரம்பக்காதல் திருமணம், விதவைக்கோலம், மிராசுதாரர் நேசம் ஆகியவைகள் விளக்கப்பட்டபிறகு, அவள் உதகமண்டலத்தில், தனது ஆரம்பக்காதலன் சோமுவைச் சந்திக்கும் விஷயம் தெரிவிக்கப்படுகிறது. அந்தரசமான கட்டம் இது.]

பசி கிடையாது! தூக்கம் கிடையாது! துக்கம் வராது! நாரதரின் தம்புரு. நந்தியின் மத்தளம். அரம்பை, ஊர்வசியின் நடனம், காமதேனு, கற்பக விருட்சம், தங்கக்கோபுரம், பவளமாளிகை, பச்சைப் புற்றரை, சிங்கார நந்தவனம், பாரிசாதமணம், இன்னும் "தேவலோகத்தை" எப்படி எப்படியோ வர்ணிக்கிறார்கள். இவைகளைப்பெற, நாம் எதோ புண்ணியகாரியம் செய்யவேண்டும். செய்தால் இத்தகைய உலகத்திலே போய்ச்சுகமாக வாழலாம். கெட்டகாரியம் செய்தால், அக்குனிக்குண்டம், அகன்றவாய்ப்பாம்பின் புற்று, நெருப்புச்சிலை, முள்பீப்பாய், செக்கு, செந்தேள், ஈட்டிமுனை, அரிவாள்நுனி, சம்மட்டி அடி சக்கரம், என்று எதேதோ பயங்கரமான பொருள்கள் நிறைந்த நரகலோகத்திலே புகவேண்டும் என்று கூறுகிறார்கள். என்னைக் கேட்டால், சொல்லுவேன், பணம் படைத்தவர்கள் புராணப் புரட்டர்கள் கூறும் தேவலோகத்தை, இங்கேயே அடைய முடியும். ஏழைகளுக்கு, உலகம், நரகவேதனையைத்தான் தருகிறது. உதகமண்டல உச்சியிலே வெப்பத்தை நீக்கிக்கொள்ள நாங்கள் போனபோது, "தேவலோகம்" எங்களை வரவேற்றது. நான் மகாகெட்டவள், விதவைக் கோலத்தைவிட்டு, விபசாரியானேன். ஆகவே "நரகம்" எனக்கு வரும் என்றுபுராணீகர்கள் கூறுவார்கள். ஆனால், தேவலோகத்தில்நான் இருப்பது அவர்களுக்குத் தெரியுமோ! அழகியபங்களா, அதை அடுத்துப் பூந்தோட்டம், அதிலே பலவர்ணப் பூக்கள், வானத்திலே மேகம் மோகன ரூபத்தில் உலவிற்று, பனிநீர் தெளிப்பது போன்ற சிறு தூறல், பட்டு விரித்தது போன்றபாதை, மேனகை அரம்பையர் போன்ற மாதரின் சிரிப்பு, அருமையான சினிமா, ஆனந்தந் தரும் உண்டிவகைகள், ஆயாசத்தைப் போக்கும் கேளிக்கைகள், அடடா உதகமண்டத்தில் நான் கண்ட உல்லாசம், எனக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரை புளகாங்கிதமாகத்தான் இருந்தது. இவ்வளவு சுவை வாழ்க்கையிலே இருக்கிறது. வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம் உலகமேமாயை என்று கூறும் பேர்வழிகளும் இருக்கிறார்கள். யாருக்கு உலகம்மாயை! பணம் படைத்தவர்களுக்கா! சுத்த பைத்யக் காரத்தனமான பேச்சு. உலகம், அவர்களின் ஊஞ்சல்! அவர்கள் அதிலே சாய்ந்து கொண்டு, ஆடிச்சல்லாபிக்கிறார்கள். அதைக்கண்டு, இல்லாதவர்கள் எனக்கும் அங்கே இடங் கொடு என்று கேட்கத் தொடங்கினால் என்ன செய்வது என்று கிலிகொண்டு, தந்திரமாக, இந்த வேதாந்தத்தைப் போதித்து விட்டார்கள். சர்க்கரை டப்பியைக் குழந்தை எடுக்கப் போனால், வீட்டிலே சொல்லவில்லையா, "அதைத் தொடாதே. அது மருந்து" என்று. குழந்தைகள் நம்பி விடவில்லையா. அது போல், உலகம் மாயை" என்ற பேச்சை, விஷயத்தை உணராத வரையில் கேட்டு நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இதோ காய்கிற சூரியனையும் நாங்கள் ஏய்த்து விட்டோமே. பேப்பரில் படித்தோம். 110 டிகிரி, 108 டிகரி, ஆறு பேர் மண்டை வெடித்து விட்டது என்று வெய்யல் கொடுமையின் செய்திகளை. நாங்கள், சூரியன் அடங்கி ஒடுங்கி இருக்கும் படி செய்து விட்டோம். கொஞ்ச நேரம் வந்து உலவட்டுமா என்று எங்கள் அனுமதியைக்கேட்டுக் கொண்டு சூரியன் வந்து போவது போல்தானே, உதகமண்டலத்திலே இருந்தது. கண்ணுக்கும் கருத்துக்கும் இங்ஙனம் நாங்கள் விருந்து தந்துகொண்டு, வேடிக்கையாகக் காலந்தள்ளிக் கொண்டிருந்தோம்.

பாம்பாக வந்தாண்டி அவன்
  படுக்கையில் புரண்டாண்டி,
வேம்பென்று வெறுத்தேண்டி
  பின்னால் வேதனைப் பட்டேண்டி
கண்ணன் செய்த கபடம்
  என்னை மிக கலக்கி விட்டதடி
சொர்ண நிறமான பாம்பு
  சொது சர்க ஆடு தென்றன்
கண்ணாலே காண்போம் என்றேன்
  அது என் கன்னிப்பழம் தின்றதே

என்று, 'அல்லி' பாடினாள் என்பதாக என் வீட்டு வேலைக்காரப் பெண் எனக்கு, எங்கள் பங்களாத் தோட்டத்திலே பாடிக் கதை சொல்லிக் கொண்டிருந்தாள். அந்தப் பெண் கூறிய கதையைக் கேட்டுக் கொண்டு நான் என் பிரியமுள்ள குச்சு நாய் டைகரின் முதுகைத் தடவிக்கொடுத்துக் கொண்டு இருக்கும்போது, யாரோ என்னைப் பார்க்கவந்திருப்பதாக வேலைக்காரன் வந்தழைத்தான். மிராசுதாரர், மைசூர் ரேசுக்குப் போய்விட்டார். ஆகவே நானே வீட்டுக் காரியத்தைக் கவனித்துக் கொண்டிருந்தேன். கூப்பிடுவது யார்? என்று தெரியவில்லையா என்று வேலைக்காரனைக் கேட்டேன். இல்லை என்றான். எப்படி இருக்கிறான்? எதற்குப் பார்க்க வேண்டுமாம்? யாரைப் பார்க்க வேண்டுமாம்? என்று கேட்டுக்கொண்டே உள்ளே போனேன். ஹாலில், ஒருவன் உட்கார்ந்து கொண்டு பேபரைப் படித்துக்கொண்டிருக்கக் கண்டேன். நேரே என் அறைக்குச் சென்று, அலங்காரம் ஏதாகிலும் குறைந்து விட்டதா என்று கண்ணாடியில் பார்த்துவிட்டு, ஹாலுக்குள் வந்தேன். உட்கார்ந்திருந்த மனிதன் எழுந்து நின்றான். இருவரும், வாய்பிளக்க நின்றோம். என் எதிரில் நின்றவர் சோமு! எதிர்பாராத சந்திப்பு! ஒரே விநாடியில் என் மனதில், பல ஆண்டுகளாகப் படிந்திருந்த நினைவுகள் தோன்றி, என் உள்ளத்தை ஒரு விநாடியில் குலுக்கிவிட்டன. நான் ஆச்சரியப்பட்டது போலவே சோமுவுக்குமிருந்திருக்கும். சோமுவும், ஆச்சரியத்தால், அசைவற்று, பேச்சற்று நின்றான். சோமு நான் அங்கு இருப்பதை அறிந்து வரவில்லை, நானும் வந்திருப்பது சோமு என்று எண்ண இடமேயில்லை. சோமு புதிதாக வந்துள்ள மோட்டார் தேவைப் படுமா? இல்லையானால் பழய காருக்கு, புது சாமான் தேவையா? என்று விசாரித்து வியாபாரம் செய்யவே அங்கு வந்தான் எனப் பிறகு தெரிந்தது. நீயோ மோட்டார் கம்பெனியின் ஏசன்ட் வேலையில் சோமு இருப்பது எனக்கு எப்படித் தெரியும்? பங்களாக்கள் தோறும் சென்று, மோட்டார் வியாபாரத்துக்கு ஆர்டர் சேகரிக்கும் வழக்கப்படி, எங்கள் பங்களாவுக்கு சோமு வந்தான். நல்ல கிராக்கி கிடைக்கும் என்று எண்ணித்தான் உள்ளே நுழைந்திருப்பான். ஆமாம்! நல்ல கிராக்கியாகத்தான் கிடைத்தது,

(9-ம் பக்கம் பார்க்க)

## எதிரொலி.

ஸ்ரீ பங்கிம் சந்திர சட்டர்ஜி என்ற வங்காளப் பெரியார் 'ஆனந்தமடம்' என்ற கதையை எழுதினார். அந்தக்கதையில் ஒரு சந்யாசிக்கூட்டத்தார் முக்கிய பாத்திரங்கள். அவர்கள் **தங்கள் ஜன்மபூமியை** முஸ்லீம் ஆட்சியிலிருந்தும் இங்கிலீஷ்காரர்களிடமிருந்தும் விடுதலை செய்ய முயற்சிக்கிறார்கள். அவர்கள் தான் வந்தேமாதரம் என்று கோஷித்து தேசமாதாவை வணங்குகிறார்கள் —கல்கி (குட்டி)

அந்தப்புத்தி இப்பொழுதாவது வந்ததே தம்பி! மெத்தச் சந்தோஷம். முஸ்லீம் ஆட்சியை ஒழிக்கவிரும்பிய வந்தேமாதரத்தை, சட்டசபையிலே பாடுவேனென்று அந்த ஆச்சாரியார் அன்று ஆர்ப்பரித்தாரே, அப்போது வால்பிடித்துக்கொண்டிருந்தவர் இப்போது, இப்படி எழுதுகிறார். அடிமேல்அடி அடித்தால்அம்மியும் நகருமப்பா! பாரேன் இப்போது இந்தக்கூட்டத்துக்கு புத்தி துலங்குவதை.

* * * * *

முஸ்லீம்களின் பாகிஸ்தான் கோரிக்கைவிஷயத்தில்மட்டும் 'மாதாவைக்கூறு போடுதல்' 'தாயைத் துண்டாடுதல்'' முதலிய பயங்கரமான சொற்களை உபயோகப்படுத்துவதில் அர்த்தம் இருக்கிறதா? வெறும் துவேஷத்தினாலோ, அறியாமையினாலோ உபயோகிக்கும் சொற்களா இல்லையா? கல்கி

யாரைத்தம்பி கேட்கிறாய்! போய் ஆச்சாரியாரைக் கேள்! அவர்தான், பாரதமாதாவைத் துண்டிக்காதே என்று பேசினார். அந்தப்பாட்டை அவரது தாசர்கள் பாடினர். அதை ஆச்சாரியார் அன்று பாடிய போது, துவேஷமும் அறியாமையும் தாண்டவமாடிற்று. யார்செய்த புண்ணியமோ, இன்று ஆச்சாரியார் பிரகஸ்பதி யாகிக்கொண்டு வருகிறார். ஆனால் இந்தப் புத்தி நிலைக்கவேண்டுமே! கண்ட கோயிலிலே கையெடுத்துக் கும்பிட்டுக் கோரிக்கொள்ளப்பா. தம்பி கல்கி, மறுபடியும் வேதாளம் முருக்கமரம் ஏறாமற் பார்த்துக்கொள். நீயும் ஜாக்கிரதை!

* * * * *

தனித்தனி அரசாங்கங்கள் ஏற்படுத்துவதை "தேசமாதாவைத் துண்டாடுதல்'' என்று சொல்வது பைத்தியக்காரத்தனம். கல்கி.

உண்மையான பேச்சு! ஆனால் உங்கள் உலகம் போற்றும் உத்தமர் காந்திக்கு இன்னமும் அந்தப் பித்தம் தெளியக்காணோமே, என்னசெய்ய உத்தேசிக்கிறாய்?

## எதிர் பார்த்தது

29-ந்தேதி, ஈரோட்டில், அன்பர் ஆச்சாரியார், பெரியாரைச் சந்தித்துப்பேசுவார் என்று நான் முன்கூட்டியே அன்றே எழுதினேன். நான்கூறினபடி, சந்தித்தனர், சம்பாஷித்தனர். அதுமட்டுமல்ல! அன்றுமாலை நடந்த பொதுக் கூட்டத்திற்கு, பெரியாரை வருமாறு, ஆச்சாரியார் கேட்டுக்கொள்ள, பெரியாரும், சென்றார். பெரியார் வந்ததும், **பெரியாருக்கு ஜே!** என்று ஆச்சாரியார் ஆரவாரித்தார், மக்களும் வாழ்த்தினர். அதுமட்டுமா! **தென்னிந்தியா பூராவும் விரும்பினால், திராவிடஸ்தான் தரவேண்டியதுதான்** என்று ஆச்சாரியார் அன்றைய கூட்டத்திலே கூறினார்.

பரதன்.

## மதிவெட்டிகள்

மாடு வெட்டி மங்கலம் என்ற பெயருடன் விளங்கும், தென்னாற்காடுகிராம மொன்றில் காளிக்கு சென்ற வாரத்தில் 14எருமைக் கடாக்களை பலியிட்டார்களாம்! என்னபேதமை! மதத்தின் பேரால் எவ்வளவு மடத்தனமான காரியம் நடக்கிறது பாருங்கள். இத்தகைய ஆபாசம் கூடாதென்று, சென்னை சீவரட்சக பிரசார சபையினரான தோழர் சீபால், பலநாட்கள் அவ்வூரில் பலமான பிரசாரம் நடத்தி, 1500 பேர் கையொப்பமிட்ட மகஜர் தந்து, ஆதாரங்களைக்காட்டி இந்தக்காட்டுமிராண்டிச் செயலைத்தடுக்க அரும் பாடு பட்டார். ஆனால் அந்தக் கோயிலின் தர்மகர்த்தா, காளி, பலி வேண்டாமென்று கூறினால் மட்டுமே பலியை நிறுத்த முடியும் என்று கூறினாராம் இது எவ்வளவு அறியாமை நோக்குங்கள். காளிபேசுமா என்றதற்குக் கோயிலிலே ஓர் இடத்தில் தெவுளி சொல்லட்டும் என்றாராம்.! என்ன விபரீதபுத்தி! மாடு வெட்ட வேண்டுமா வேண்டாமா என்று மதிசொல்ல வில்லையா! அக்கிரமச் செயலை, ஆபாசத்தை, ஆலயத்திலே "அவன்'' பெயர் கூறிநடாத்துவது கூடாது என்று அறிவுகூறவில்லையா? கன்னிப் பெண்ணை எனக்குப் பலியிடு என்று காளி கேட்டால், இந்தப்புண்ணிய மூர்த்திகள், அங்ஙனமே செய்வரா? சர்க்கார் இத்தகைய தீய செயலைத் தடுக்கத் துணிந்திருந்தால், செய்தேதீருவோம் என்று கூறியிருப்பரா! உலக அறிவின் போக்கு இதுவென் உணர்ந்த பிரிட்டிஷ் சர்க்கார், மத விஷயத்திலே தலையிடோம் என்று கூறிக்கொண்டிருப்பதனால் தான், மடையனும் கடையனும், மதத்தைக் காட்டி, தமது வாலை நீட்டி, ஆட்டம் ஆடுகின்றனர். மாடு வெட்டி மங்கலம் என்ற பெயரே, எவ்வளவு அருவருப்பைக் காட்டுகிறது. மதி வெட்டிகள் அங்கு இருப்பதால்தான், மாடு வெட்டிடும் காரியம் இன்னமும் நடக்கிறது. இத்தகைய கொடுமைகளை எப்போது ஒழிக்கப் போகிறீர்கள்?

## ஆச்சாரியாருக்குப் பாகிஸ்தானில் நம்பிக்கை கிடையாது.

காந்தியார்.

சம்பந்தியாரின் திருக்கலியாண குணத்தைத் தெரிந்து கொண்டிருக்கும் நீர், என்கரே, நரிமன் M. N.ராய், சுபாஷ்போஸ் போன்றார்மீது பாய்ந்ததுபோல் ஆச்சாரியார்மீது பாயவில்லை, கையாலாக வில்லையா! ஆரியபக்தியா! ஆண்மை உம்மை பகிஷ்கரித்துவிட்டதா!

* * * *

## காந்திஜீ என் வழிக்குத் திரும்புவார்.

ஆச்சாரி.

என்னமோ ஸ்வாமிகளே! எதைக்காட்டி அவரை மயக்குவீரோ! என்ன சொக்குப்பொடி வீசுவீரோ! உமது கைபட்டால் கருங்குழியும் பொன்சுழியாகி விடும் போலும்!

* * * *

## ஆச்சாரியார் இப்போது புது உறவுகள் பெற்றுவருகிறார்.

பாரததேவி.

இதைக் கண்டு ஏன் 'தேவி' ஆச்சரியப்படுகிறாய் ஜாலியன்வாலா படுகொலை செய்தவர்கள் என்று எந்த வெள்ளையரைக் கூறினாரோ அவர்களின் உறவை ஆச்சாரியார் முன்புபெற்றபோது கண்டு ஆச்சரியமுண்டாகவில்லையா!

* * * *

**இந்தி எதிர்ப்பாளர் மீது ஆச்சாரியார் கிரிமினல் சீர்திருத்தச் சட்டத்தைப் பிரயோகித்தபோது பல காங்கிரசார் வருந்தினார்கள். பாரததேவி.**

**வருந்தினார்கள்! ஆனால் அந்த மாதம் 75 கிடைத்ததே அது அவர்களின் வருத்தத்தைத் துடைத்து விட்டது. சூடு சொரணையைக் கூடச சுறையாடிச் சென்றது. வெள்ளையப்பன் இலேசானவனா?**

தேவை.
மாதம் ரூ 25/- சம்பளத்தில் அனுபவமும் செல்வாக்கும் உடைய ஏஜண்டுகள் உடனே தேவை. மற்ற விபரங்களுக்கு 0-1-6 ஸ்டாம்பு அனுப்பித் தெரிந்து கொள்ளவும்.
காஞ்சி நிதி லிமிடெட்,
காஞ்சிபுரம்.

திராவிடநாடு

ஞாயிறு] 7—6—42 [காஞ்சி.

# தேனுடன் வேம்பு!

"அது சரி, ஓய்குப்பு ஜோஸ்யரே, மாப்பிள்ளைக்குச் சம்மதந்தானே. நம்மபெண் அவனுக்குப் பிடித்தந்தானே" என்று பெண்ணின் தகப்பனார் கேட்க, கலியாணத்தரகர், குப்பு ஜோஸ்யர் "அதைக் கேட்கவே வேண்டாம். உம்மபெண்ணைத்தான் கலியாணம்செய்து கொள்ள வேண்டுமென்று பிள்ளையாண்டான் ஒத்தைக் காலில் நின்று தவங்கிடக்கிறான்" என்றுகூறிட பெண்ணின் தகப்பனார் மிக்க மகிழ்கிறார். கருத்தொத்து வாழுவர் மணமக்கள் என்று எண்ணி ஆனந்திக்கிறார். இவ்வளவு நல்ல செய்தியைக் கொண்டு வந்தவருக்கு, பாலும் பழமும் பட்சணமும் பணமும் தாராளமாகத் தருகிறார். காலையிலே இதுபெற்று, மாலையிலே மாப்பிள்ளைவீடு போகிறார் ஜோஸ்யர். மாப்பிள்ளை வீட்டாருக்கு, பெண் எப்படிப்பட்ட குணமுள்ளவளாக வந்து வாய்க்குமோ என்பதிலே யோசனை. "வாங்கோ ஜோசியரவாள்! பெண் வீட்டாரைக் கண்டு பேசினீளோ. பெண்எப்படிப்பட்டவள், குணம் எப்படி? குடித்தனத்திலே ஒழுங்காக நடக்குமோ?" என்று விசாரிக்கிறார் மாப்பிள்ளையின் தகப்பனார். "திவ்யமான பெண்! குணவதி! தன்வீடுவேறு, மாமிவீடுவேறு என்று வித்தியாசம் பார்க்காமல, எல்லோரையும் ஒரே கண்ணால் கவனித்து நடப்பாள்" என்றார் ஜோதிடர். மாப்பிள்ளை விட்டாருக்கு உள்ளம் குளிர்ந்தது.

முகூர்த்தம், விடியுமுன்! ஒரேகாலால் தவங்கிடக்கும் மாப்பிள்ளைக்கும் ஒரே கண்ணால் கவனிக்கும் குணவதிக்கும் திருமணம் நடந்தேறியது. கதிரோனும் கிளம்பினான். மாப்பிள்ளைக்கு ஒருகால் ஊனம், நொண்டி! பெண்ணுக்கோ கண் நொள்ளை! ஒரே கண் மட்டுமே சரியாக இருந்தது, நொண்டிமாப்பிள்ளைக்கு நொள்ளைக்கண் நாயகி! சம்பந்திகளுக்குள் சண்டை! இருகுடும்பத்தினரும் குப்பு ஜோதிடரைக் குட்டினர். ஜோதிடர், "நான் முன்னமேயே சொன்னேனே, மாப்பிள்ளை ஒரே காலால் நிற்கிறான் என்று" என்று பெண்விட்டாருக்குக் கூறிவிட்டு, "பெண் எல்லோரையும் ஒரே கண்ணால் கவனித்துக் கொள்ளும் என்று நான் ஏற்கனவே கூறினேனே" என்று மாப்பிள்ளை வீட்டாருக்கும் சமாதானங் கூறினாராம்!

இத்தகைய குப்பு ஜோதிடர் நிலைமையிலே அன்பர் ஆச்சாரியார் இருக்கிறார்! சூரர்களின் தன்மையே தனிரகம்! அந்த ஆச்சாரியாரின் பேச்சும் போக்கும் நன்கு காட்டுகிறது.

வந்த விதமாகவாவது, கலியாணத்தை முடித்து வைத்தால் தனக்கு இலாபம் உண்டுஎன்பது தெரிந்து குப்பு ஜோதிடர் நடந்துகொண்டது போல், எப்படியோ ஒரு விதத்தில், தந்திரமாக காங்கிரசுக்கும் லீகுக்கும், இடையே சமரசம் உண்டாக்கி வைத்தால் தமக்குப் பதவிப்பரிசு கிடைக்குமென்று ஆச்சாரியார் கருதுகிறார், எனவேதான் அவர் எப்படியோ தாலி கழுத்திலேறினால் தமக்குப் பணம் கிடைக்குமென்று எண்ணிய தரகன்போல், இருசாராருக்கும், சமாதான மொழி புகன்று ஜோடி சேர்க்கப் பார்க்கிறார்.

சஞ்சலப்படும் சகாக்களிடமும் சீறும் சீடர்கள் முன்னிலையிலும், "நான் பாகிஸ்தான் கோரும் உரிமை முஸ்லீம்களுக்கு உண்டென்பதைக் காங்கிரஸ், கால நெருக்கடியை உத்தேசித்து ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கூறுகிறேனே யன்றி, பாகிஸ்தான் தந்துவிட வேண்டுமென்று கூறவில்லை" என்றுதந்திரமாகப் பேசுகிறார். லீகர்கள், திராவிடர்கள் கூடிக்கேட்கையிலே, "சுயநிர்ணய உரிமையை நான் மறுப்பேனா? உங்கள் கோரிக்கை பிரிவினை எனில், அதைப்பெற்றுக் கொள்ளுங்கள். நான் தடைசெய்யேன்" என்று கூறுகிறார். தமது தந்திரப் பேச்சினால் இருசாராரையும் ஏய்க்கப் பார்க்கிறார். இரை கிடைக்குமென்றுஅலைந்து திரிகிறார். புதிய நண்பர்கள் கிடைக்கிறார்கள் என்று மிரட்டி பழய தோழர்களைத் தமது பக்கம் இழுக்க முயற்சிக்கிறார். அதைப் போலவே, புதிய நண்பர்களைப் பெற, அந்தக் கூட்டத்திடம் புன்னகை புரிந்தும், புகழுரை வீசியும் பார்க்கிறார். இந்தப் போக்கு ஆச்சாரியாருக்கு ஆரம்பத்திலே பலன்தரக்கூடும் என்றாலும், வெகுவிரைவிலே இது ஆபத்தையே விளைவிக்கும். இருசாராரின் சந்தேகமும், எதிர்ப்பும் பலப்பட்டு, இடையே இவர் சிக்கிக்கொண்டு சிதைவார். எனவே இந்தத் தரகுநிலையிலிருந்து நீங்கி, உண்மை உரைசெய்து, ஏதாவதோர் பக்கம் இறுதிவரை பார்ப்பதென்று நின்றுழைக்க வேண்டும். இல்லையேல், மதுரை, ஆச்சாரியார் செல்லுமிடமெங்கும் தொடரும்! என்று நாம் அஞ்சுகிறோம்.

எண்ணித்துணிக கருமம்! துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு என்பது வள்ளுவர் வாக்கு. ஆச்சாரியார், இப்போது கொண்டுள்ள அபிப்பிராயத்தை சமயம் கிடைத்ததும் மாற்றிவிடத் தயார் என்று தமது சகாக்களுக்குத் தேறுதல் கூறவே இங்ஙனம் பேசுகிறாரா என்று நாம் கேட்கிறோம். அபிப்பிராயங்கள் மாறுவது இயற்கை மட்டுமல்ல, மனவளர்ச்சிக்கேற்றபடி அதுமுறையுமாகும். ஆனால் அதிலே உண்மை உறவாட வேண்டும், பாவனை பாதமிடுவது பாதகம். தெளிவு ஏற்படாததால், ஒரு கருத்தைக் கொண்டவர், பின்னர் தெளிந்து, அக்கருத்தை மாற்றிக் கொள்வர். இதை உலகிலே நாம் காண்கிறோம். இம்முறையிலே ஆச்சாரியார் தமது பழய கருத்தை மாற்றிக் கொண்டிருப்பின் நாம் மகிழ்வோம், ஆனால் அவரது சொற்பொழிவுகளிலிருந்து நமக்குச் சந்தேகம் பலப்படுகிறதே யன்றி, அவரிடம் நம்பிக்கை உதிக்கவில்லை.

"பாகிஸ்தான் திட்டத்தைப்பற்றி நான் முன்பு தவறான கருத்துகொண்டிருந்தேன். அதனைப் படித்தேன். அதனை ஆதரித்தோரை இழித்துப்பேசினேன். இன்றோ, அந்தப்பாகிஸ்தான் தேவையானதும் நியாயமானதும், தடுக்க முடியாததுமான ஓர் நீதி என்பதை உணர்ந்தேன், எனவே அதனைநான் ஆதரிக்கிறேன்" என்று ஆச்சாரியார் கூறினால், அவரது மனம் உண்மையிலேயே மாறிவிட்டதென்பதை யறிந்துநாம் மகிழ்வோம். ஆனால் ஆச்சாரியார் அதுபோல் பேசுகின்றாரில்லை.

சென்னைவாலிபர் மாநாட்டிலே கடந்தவாரம் பேசுகையில் ஆச்சாரியார், "பாகிஸ்தான் குழந்தையை வெட்டுவது போலாகும். தாயைத்துண்டிப்பது போலாகும் என்றெல்லாம் நான்கூறியது உண்மையே. இவ்விதம் நான்முன்பு சொல்கையில் பாகிஸ்தான் ஒரு அபிப்பிராயமாகவே இருந்தது. இப்போது

அது உண்மை விஷயமாக மாறியிருக்கிறது. படித்தவர் படிக்காதவர்கள் முதலிய ஏராளமான பேர்கள் அதை உண்மைவிஷயமாகக் கொண்டிருக்கிறார்கள்" என்று கூறிவிட்டு, "மீண்டும் பாகிஸ்தான் விஷயம் வெறும் அபிப்பிராயமான நிலைமைக்குமாறினால் நானும் பாகிஸ்தான் கேட்டது என்று சொல்லக்கூடிய நிலைமைக்கு மாறிவிடுவேன்" என்றுசொல்கிறார்.

இந்தப்பேச்சிலே புதைந்துள்ள பயங்கரமான உண்மையைச் சற்று ஊன்றிப்பார்க்கும்படி தோழர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

எட்டினால் குடுமி எட்டா விட்டால் கால் என்ற பழமொழிக்கும் ஆச்சாரியாரின் பேச்சிலிருந்து தெரியவரும் அவரது போக்குக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது என்று கேட்கிறோம்.

முன்பு பாகிஸ்தான் வெறும் அபிப்பிராயமாக இருந்தது என்று ஆச்சாரியார் கூறுவதன் கருத்து என்ன? அகில இந்திய முஸ்லீம்லீக் மாநாட்டிலே பாகிஸ்தான் தீர்மானமாகி, லீக்தலைவரால் விளக்கப்பட்டு, முஸ்லீம்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டபிறகு, ஆச்சாரியார், அதனை "வெறும் அபிப்பிராயம்" என்று எப்படிக்கருதலாம்! வெட்டிப்பேச்சு பேசுபவரா ஜனாப் ஜின்னா! லீகின் மூலாதாரக்கொள்கையாக பாகிஸ்தான் அமைந்தது சென்னையில் நடந்த மாநாட்டிலே. அப்போதும் ஆச்சாரியார், பாரதமாதாவை வெட்டும்கதையைத்தான் பிதற்றினார். அவரது பிரச்சாரம், அவரது சீடர்களிடையே பேதமையையும் ஆணவத்தையும் வெறியையும் வளர்த்தது. இன்று ஆச்சாரியாருக்கு, பாகிஸ்தான் உண்மையான விஷயமாகத் தெரிகிறதாம்! ஆனால் இதுவாவது நிலைக்குமா என்றால், இல்லை, மீண்டும் பாகிஸ்தான் வெறும் அபிப்பிராயமாக மாறும்போது இவர் பாகிஸ்தான் கெட்டதுஎன்று கூறும் நிலைமைக்கும் மாறிவிடுவாராம். எவ்வளவு மமதை! இவர் கூறுவதே வேதம், காட்டுவதே வழி, தீட்டுவதே திட்டம், எந்தெந்த நேரத்திற்கு எப்படி எப்படித் தோன்றுகிறதோ அவ்விதம் மாறுவார், மொழிவார், அதனையே மக்கள் கொள்ளவேண்டுமாம்! ஜார்கூட இங்ஙனம் கூறினானென்று சரிதம் சாற்றக்காணோம்.

காலையிலே நான் சாது, மாலையிலே சூரன், மீண்டும் பொழுது விடிந்ததும் சாது என்று கூறினானாம் குடியன். போதைக்கேற்ற போக்கு அவனுக்கு! அதுபோல் ஆச்சாரியார், தமக்குப் பதவிவேட்கை ஏற்படும்போது பாகிஸ்தானை ஆதரித்துப்பேசுவார், அந்த விடாய் தீர்ந்ததும், பாகிஸ்தானைப்பழிப்பார் என்றே தோன்றுகிறது.

ஆச்சாரியார், இதுபோல், எதற்கும் கட்டுப்படமாட்டார், தமது கருத்தையேகூட அவர் கவைக்கு உபயோகிக்கத் துணைகொள்வாரேயன்றி கருத்தைக் கடைப்பிடித்தே நடப்பார் என்றும் கூறமுடியாது.

திருச்சிதேவரை டாக்டர் ராஜன் முறியடித்தபோது, டாக்டர் ராஜனைக்கண்டித்த அதே ஆச்சாரியார், பதவியில் அமரும்சமயம் வந்தபோது அதே டாக்டர் ராஜனுக்கு மந்திரிவேலையை அளித்தார். அவரது மனம் அவ்வளவு வளையும் பக்குவம் பெற்றிருக்கிறது.

சட்டசபைப் பிரவேசமே கூடாது என்று சண்டமாருதப்பிரசாரம் புரிந்தவர், தாமும் தமது சகாக்களும் சட்டசபை நுழையமுடியும் என்று தெரிந்ததும், புதுவேட்டம் புனையவில்லையா!

எந்த வெள்ளையரை மூட்டை முடிச்சுடன் விரட்டப்போவதாகக் கூறினாரோ, அவர்களையே, தமது பதவியை நிலைநிறுத்திக் கொள்வதற்காக், "வெள்ளையர் குரோட்டன்ஸ், குளிர்ந்தநீர் தெளித்தவண்ணம் இருக்கவேண்டும்" என்று கூறவில்லையா! எர்ஸ்க்கைன் பிரபுவின் பிரியத்தைப் பெறவில்லையா! தமது காரியம் பலிக்க, எதையும் செய்யவே ஆச்சாரியார் எப்போதும் தயாராக இருந்தார். இது அவரது சொந்த, தனிப்பட்ட இயல்பு அல்ல! இனஇயல்பு! இதைமறப்போர், உண்மையை உணரார்!

பாகிஸ்தான் பிரச்னையை, காலநெருக்கடியுடன் சம்பந்தப்படுத்திமட்டுமே பேசிவருகிறார் ஆச்சாரியார். இதிலேதான் ஆரியசூட்சி ஆழப்புதைந்திருக்கிறது.

"ஜப்பானியரால் நாட்டுக்கு ஆபத்து நெருங்குகிறது. இந்த நேரத்திலே நாட்டிலே தேசிய சர்க்கார் வேண்டும். அதுபெற, லீகுடன் சமரசம் தேவை, லீகுடன் சமரசம்பெற, அது கோரும் பாகிஸ்தானை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்" என்று மொழிகிறார் சாணக்கிய சந்ததியார்.

அவர் பாகிஸ்தானைவிட, காலநெருக்கடி பற்றியே அதிகமாக வற்புறுத்திவருவதன் கருத்தை ஆராய்ந்து நோக்காது அவசர ஆனந்தமடைவோர் பின்னர் கைபிசைந்துகொள்ள நேரிடும்.

ஏகாதசி விரதமிருப்பது துவாதசி விருந்துண்ணவே, ஏகபத்னி விரதமிருப்பது குடும்ப பாரத்தைப் பெருக்காதிருக்கவே என்று ஆரிய சிகாமணிகள் வியாக்யானம் கூறுவர். அதுபோல், பாகிஸ்தானை ஒப்புக்கொள்வதாகக் கூறுவது பரிபாலனத்தைப்பெறவேயாகும், என்று ஆச்சாரியார் எண்ணுவார்.

தேசிய சர்க்கார் அமைத்து ஆண்டுவிட்டு, போர் முடிந்து புது அரசியல், வகுக்குங்காலை, பழயபடி பாகிஸ்தான் விஷயமாகப் பிரச்னைகிளம்பியதும், காங்கிரசும் லீகும் மோதிக்கொள்ள நேரிட்டால், ஆச்சாரியார், அந்தநேரத்திலே, பாகிஸ்தானை எதிர்க்கத்தொடங்குவார். அவருக்கு அந்தத்துணிவு உண்டு.

"இத்தனைநாளாக நாம் ஒன்றுகூடி ஆண்டுகொண்டுவந்தோமே" அதுபோலவே இனியும் இருப்போம், பாகிஸ்தான் வேண்டாம்" என்று பேசுவார். "மக்கள் பாகிஸ்தானை விரும்பவில்லை" என்றுரைப்பார். "நான் நெருக்கடியான நேரத்திலே நெஞ்சில் வேதனைகூடாதென்பதற்காகப்பாகிஸ்தான் உரிமையை ஒப்புக்கொண்டேன். பாகிஸ்தான் கேட்கும் உரிமை உண்டென்பதை ஒப்புக்கொண்டேனேயன்றி, பாகிஸ்தான் சரியானது என்று நான் ஒருபோதும் சொன்னதில்லையே" என்று கூறுவார். அதற்குத் தமது பழய பேச்சை எடுத்துப் புதுவியாக்யானம் கூறிக்காட்டுவார், பாரதமாதாவின் படம் தீட்டுவார்!

உண்மையில் அவர் உளம்நிறைந்த அன்பும் தூய்மையும் கொண்டவரெனில், பாகிஸ்தான் திராவிடஸ்தான் கோரிக்கைகளை நியாயமானது என்று கூறவேண்டும், காலத்தின் நெருக்கடிபற்றியோ, தேசிய சர்க்கார் அமைப்பது பற்றியோ இதில் கலப்பது கூடாது. பிரிவினைத்திட்டம், காலம், அமைதியாக இருந்தபோதே பிறந்தது. போர்க்குழவியல்ல!

காலத்தின் நெருக்கடியைத்தீர்த்து எதிரியை முறியடிக்கவேலை விட இந்த வேதியர் தேவைஎன்று நாம் கருதவில்லை. டாங்கி, பீரங்கி, குண்டு, தளவாடங்கள், காலத்தின் போக்கை மாற்றியேதீரும், குட்டிக்கதைகள் தேவையில்லை. தேசியசர்க்கார் என்பது விமானப்படையா, தரைப்படையா, கப்பற்படையா? இல்லை, பதவிப்படை! அதைக்கொண்டு எதிரியை விரட்டமுடியாது. அது இருந்தும் பிரான்சும்பிறவும் வீழ்ந்தன. போர்நிலைமை என்ன?

ரஷியகளத்திலே, ஜெர்மானியரின் திட்டம் குலைந்துவிட்டது. ரணகளச்சூரர் ரோமல் ஆப்பிரிக்கப் பாலைவனத்திலே, திட்டம் தகர்ந்துதிணறுகிறார். சீனர்கள் இரத்த ஆற்றில் நீந்தி, ஜப்பானியப் பிணக்குவியலைப்பெருக்குகின்றனர். ஜெர்மனிமீதோ ஆயிரம் பிரிட்டிஷ் விமானங்கள் குண்டுவீசுகின்றன. கோலோன் நகரிலே கிளம்பிய ஜ்வாலை, ஹாலந்திலே தெரிந்

கதாம். ஒரேநாள் குண்டுவீச்சு அங்கு, பல இலட்சம் ஜெர்மானியர், வேறு பட்டினங்களுக்கு ஓடுகின்றனர். எசேன் மீதும் 1000-விமானங்கள் தாக்கின. இவையத்தனையும் பிரிட்டனிலேயே செய்யப்பட்ட விமானங்கள். இந்தப்படையுடன் அமெரிக்கப்படையும் சேர்ந்தால், நிலைமை என்ன ஆகும்! ஜெர்மனியின் கதி இதுவென்றால், ஜப்பானின் ஜம்பம் எத்தனைநாள் செல்லும். இலங்கை இருப்புக்கோட்டையாகி வருகிறது. அங்கிருந்து, பிரிட்டிஷார்ஜப்பானை எதிர்த்துத்தாக்கத்தொடங்கி, அந்தமானைப்பிடித்து, மலேயாவை மீட்டு, பர்மாவைப்பிடித்து, ஜப்பானியரை விரட்டியடிக்கப் போகின்றனர். இதற்குள் டோக்கியோ தூளாகும்படி அமெரிக்க விமானங்கள் குண்டுவீசும். இந்தக்கிலி கொண்டே ஜப்பான் அலாஸ்காவிலே அமெரிக்க விமானதளத்தைத் தாக்கிற்று.

ரஷியக்களத்திலே பிணம்புதைக்கும் வேலை, ஜெர்மனியிலே A. R. P. வேலை, பிரான்சிலே புரட்சி வீரர்களிடமிருந்து தப்பிப்பிழைக்கும் வேலை, நார்வேயில் படைஎடுப்பைத் தடுக்க அரண் அமைக்கும் வேலை, லிபியாவிலே தப்பிஓட மார்க்கம் தேடும் வேலை, இவைகளே ஜெர்மனியின் இப்போதைய வேலைகள்!

இங்கிலையில், போர்என்ற பயங்காட்டி புதுஉறவு தேடி, பின்னர் அவர்களைக் கைவிட்டுவிடும் கள்ளக் கருத்துடன் ஆச்சாரியார் உலவுவதுகூடாது என்போம். உண்மையிலேயே பிரிவினைத்திட்டம் தேவை என்பதை அவர் ஒப்புக்கொண்டால், அதற்கான முயற்சிக்கு யாவரும் ஒரே முகாமில் கூடுவோம்! ஆச்சாரியார் அதற்குச் சம்மதிக்கிறாரா, அன்றி கவியாணத்தரகர்போல், ஒரு சொல் இருபொருள் அமையும் மொழிபேசி காரியத்தை நடத்தும் போக்கிலேயே காலந்தள்ளப்போகிறாரா! என்று கேட்கிறோம்.

வேட்டையாடிக் களைத்து, இரத்தந் தோய்ந்த வாயுடன் விளங்கும் வேங்கைபோல், கருவிழியின் நீரும், மையும் கலந்து கண்ணடிக்கன்னத்தில், உண்டாக்கிய கறையும், புரண்டுகிடந்ததால், சுருண்டுகிடந்த கூந்தலும், கோபமும் சோகமும் கூத்தாடியதால் பொழிந்த வியர்வையும் கொண்டு, கைகேயி காணப்பட்டாள். அவளால் வீழ்த்தப்பட்ட வேந்தன், பஞ்சணைக்கருகே தரையிலே படுத்துக்கிடந்தான். நரையுந் திரையும் தெரியாதவிதமாக ஆனந்த வாழ்வு வாழ்ந்த தசரதன், கண்களில் நீர்புரள, மேல்மூச்சு வாங்கக் கீழே உருண்டிருந்தபோது, மந்திரி நுழைந்தார். மன்னனைக்கண்டார். "மயக்கமோ!" என்றார். "ஆம், சற்று சோகமும்" என்றாள் மதுரமொழி மாதரசி. பின்னர் வரவோ? என்று கேட்டான் மந்திரி. "வேண்டாம்,மன்னன் ஆணையை நானே மொழிவேன், இராமன் 14-ஆண்டு காடேகட்டும், பரதன் முடிசூடட்டும் இதுவே சக்கிரவர்த்தியின் கட்டளை" என்று சாற்றினாள் கேகயன் குமரி! இடிகேட்ட நாகமென்றானான் மந்திரி!

ஆரிய வீரனின் காதையாகிய இராமாயணத்திலே இக்கட்டம் மந்தரையின் கலகம், கைகேயினுடையமனமாற்றம், தசரதன் திகைப்பு, பட்டமறுப்பு என்ற ரசங்களுடன் விளங்குவதைப் புராணீகர்கள் உரைத்து, உரைத்த அலுப்புதீர உருசியுள்ள பாலைப் பருகி, மேலும்பேசுவர் "இராமன் மரவுரிதரித்தான், சீதையும் புறப்பட்டாள், இலட்சுமணன் இங்கு இனி ஏன் நான் இருப்பேன் என்றான், மூவரும், காடேகினர்" என்று முடிப்பார். மக்கள் கண்துடைப்பர்!

"அந்தமந்திரி ஓர் மதியிலி!" என்றுரைப்பார் ஆச்சாரியார், எவரேனும் இந்தக் கட்டத்தைப்பற்றி அவரது கருத்து என்ன என்று கேட்பின்.

உண்மையில், சுமந்திரருக்குப்பதிலாக அன்பர் ஆச்சாரியார், கைகேயியின் பள்ளியறை சென்றிருப்பின் வேர்தன்விம்முவதைக்கண்டு வேல்விழியாள் விளம்பியதைக் கேட்டு, என்னசெய்திருப்பார் என்று எண்ணுகிறீர்கள்? சுமந்திரன்போல், இராமனைக் காடேற்றும் வேலையைவிரைவில் செய்தாஇருப்பார்! இல்லை! இல்லை!

"கேகய குமாரி! மெச்சினேன் உன்மதியை. பாராளும் திறன்படைத்தோன் பரதனே" என்றுரைப்பார்.

"மந்திரியாரே, மகிழ்ச்சி கொண்டேன். மன்னர், இதனை மறுத்து மெத்தவாதாடினர்" என்று கைகேயி கூறுவாள். "அன்பு, அவருக்குக்கருத்தைமறைத்திடும் திரையாயிற்று" என்பார் ஆச்சாரியார், சுமந்திரர் ஸ்தானத்திலே இருந்திருப்பின்.

"மன்னனை நான் தேற்றுவேன், மகாராணி தங்களுக்குச் சிரமம் வேண்டாம். மலர்ச்சோலைக்குச் சென்று உலவுங்கள் மனநிம்மதி ஏற்படும்" என்று கூறி, கைகேயியை அனுப்பிவிட்டு, தசரதனைத்தூக்கி நிறுத்தி, தலையை உயர்த்தி "மன்னா! மனவேதனையை விடும். கேகயன் மகளின் புத்திகூர்மை உமதாவியை அழிக்குமென்று அஞ்சாதீர். நான் இருக்கிறேன்." என்று கூறுவார். "நீ இருக்கிறாயா? மிக நன்று. இராமன் போய், இங்கு எவர் இருந்தாலென்ன, இலாதொழியிலென்ன, நானே இருப்பேனோ, இறப்பேனோ" என்று மன்னன் அழ, மந்திரி புன்சிரிப்புடன், மதியின் வழிசென்று மாதின் சதியை வெல்வோம். மன்னா, கவலையுறாதே. பரதனே மன்னன் என்று புகன்றுவிடு. இராமன் காடு ஏகுவான் என்றும் கூறிவிடு. பரதனுக்குப் பட்டம்சூட்ட, முகூர்த்தம் குறிக்கவரும் முனிவரிடம் நான்பேசி பரதன் முடிதரித்தால், மண்டை ஆயிரம் சுக்கலாக வெடித்துவிடும் என்றோர் கிருஹதோஷமிருப்பதாகக் கூறச்செய்வேன். மகன் பிழைத்தால் போதும் மணிமுடி வேண்டாமென்று மான்விழியாள் கதறுவாள். வேண்டாம் வரம்! வேண்டாம் அரசு! என்று அலறுவாள்! என்று ஆச்சாரியார் யோசனை கூறுவார். "பெரும் புளுகு பேசுவதோ" என்று பேராசான் கேட்பின் நீரோ கூறப்போகிறீர், அதற்கோர் பேர் வழியை அடியேனால் கொண்டுவர முடியும். புளுகியதற்குப் பின்னர் பரிகாரமும் தேடித் தருவேன் அவனுக்கும்" என்றுகூறி, இராமாயணத்தின் போக்கையே மாற்றிவிட்டிருப்பார்.

ஆம்! ஆச்சாரியார் இதுபோது, அரசியலிலே நடத்தும் வியாக்யானங்கள் விளக்கங்கள், ஆகியவைகளையும்,,அவருடையபோக்கையும்காணுவோர், அவரது புத்தி தீட்சணியம் தசரதனுக்குப் பயன்படுவதற்கின்றிப் போய்விட்டதே என்றும் வருந்துவர்.

தற்போது அவர் பிரசாரம் செய்வதிலே காணப்படும் மொழிகள் விதவிதமான வியாக்யானங்களுக்கு ஏற்றதாக, வேளைக்கோர் பொருள் தருவதாகவே இருக்கக் காண்கிறோம். திட்டமாக, தெளிவாக, பேசமறுக்கிறார். தேனையும் வேம்பின் ரசத்தையும் கலந்து குழம்பாக்குகிறார்.

## தேசூரில் தமிழர் கூட்டம்.

1-6-42ல் வடாற்காடு தேசூரில் ஒருபொதுக்கூட்டம் தோழர் முனுசாமி முதலியார் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் C. N அண்ணாதுரை M A., அவர்களால் திராவிடநாட்டுப் பிரிவினையின் அவசியம் என்பது பற்றியும் தோழர் C. P. சின்னராசு அவர்களால் தமிழர்கள் கடமை பற்றியும். தோழர் கலியாண சுந்தரம் அவர்களால், தமிழர் முன்னேற்றத்திற்குத்தடை ஆரியப்பத்திரிகைகள் என்றும் திராவிடநாடு பத்திரிகையை மக்கள் ஆதரிக்கவேண்டியதன் அவசியம் பற்றியும் அரிய சொற்பொழிவுகள் நடந்தன. தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் அ நகசாமிமுதலியார் வந்தனோபசாரம் கூறக்கூட்டம் இரவு 9-30 மணிக்கு இனிதுமுடிந்தது.

துமஸ்தாவின் பெண் (4-ம் பக்கத் தொடர்ச்சி)

"யாரது, காந்தாவா? என்று சோமு ஆச்சரியத்துடன், ஆவலுடன் கேட்டார். 'ஆமாம்' என்று நான் கூறவில்லை. கூறுவானேன். அவருக்குத்தெரியவில்லையா என்ன! "அடையாளமே தெரியவில்லையே." என்றார் சோமு. அவர் கூடத்தான் மாறியிருந்தார். யார்தான் மாறாதிருக்கிறார்கள். எது மாறாது இருக்கிறது. கேட்டார், சம்பிரதாயப்படி. ஆகவே அதற்கும் நான் பதில் ஏதும் சொல்லவில்லை. "காந்தா, ஏன் பேச மாட்டேனென்கிறாய்" என்று கேட்டார் சோமு. பேச வேண்டுமாமே நான். என்னிடம் பேச அவருக்கு அவ்வளவு ஆசையா. அதை மட்டந்தட்டவேண்டுமல்லவா. என் அளவுகடந்த ஆசையை அடியோடு அழித்தவர்தானே சோமு.

"உன்னைக்கண்டு நான் எவ்வளவு களிப்படைகிறேன். எவ்வளவு ஆவலோடு பேசுகிறேன். நீ, என்னிடம்பேசவும் பிரியப்படவில்லையே. என்னைப்பார்க்க, பேச, உனக்கு இஷ்டமில்லையா" என்று சோமு, சற்றுச் சோகத்துடன் கேட்டார்.

சோகமா! என் எதிரிலே தாரை தாரையாகக் கண்ணீர்தான் விடட்டுமே. எனக்கென்ன என் கண்களைக்குளமாக்கிய கொடுமையை மறந்தேனா நான். "சரி! இவ்வளவு வெறுப்புடன் இருக்கும் உன்னிடம் நான் ஏனம்மா பேசவேண்டும். ஏதோ பாலியசினேகமாயிற்றே என்று பேசினேன். உனக்கு இப்போது புது அந்தஸ்து வந்துவிட்டது. பழயமனுஷ்யாள் பிடிக்கவில்லைப்போல் இருக்கிறது, நான் வருகிறேன்" என்று வாட்டத்துடன் சோமு கூறினார்.

போகாதே கண்ணே! என்று கூறி, அவர் கையைப்பிடித்து இழுத்துமடியில் உட்காரவைத்துக்கொள்வேனா என்ன! போகிறேன் என்றால், செய்யுங்கள் என்று தானே சொல்வேன். அவர் 'வாட்டம்' அவ்வளவு பெரிதா! நான் வாடியவாட்டத்தை விடவா. நான்போய்வரட்டுமா? என்று மீண்டும்கேட்டார்சோமு.

ஸ்நானத்துக்கு வெந்நீர் தயாராயிற்று என்று அதே நேரத்தில், வேலையாள் சொன்னான். இதோ வருகிறேன்என்று அவனுக்குப் பதில்கூறிவிட்டு, செய்யுங்கள் என்று சோமுவுக்கும்பதில் கூறிவிட்டு, சோபாவைவிட்டு எழுந்திருந்து, உள்ளே போனேன். டைகர் என்கூடவே வந்துவிட்டது. சோமுவிடம் நான் நடந்துகொண்டது தவறு என்கிறீர்களா?

* * * * *

ஹலோ!
யாரது?
நான்தான் சோமு.
சரி.
இன்று மாலை தியேட்டருக்கு வருகிறீர்களா?
சொல்வதற்கில்லை.
சொல்லக்கூடாதா?
புரோகிராம் தெரியாது.
காந்தா, இவ்வளவு கடுமையாக இருக்காதே. என்னைநீஎன்ன வென்று நினைத்துக்கொண்டிருக்கிறாய்.
என்னவென்று நினைத்துக்கொள்ள வேண்டும். என்னைச் சித்திரவதை செய்கிறாய்.
அப்படியா?
ஆமாம்! ஆமாம்!
சரி! சரி!

டெலிபோனை வைத்துவிட்டேன். சோமு, பதைபதைத்துக் கொண்டிருப்பார் அந்தப்பக்கத்திலே. படட்டும், படட்டும், நான் சித்திரவதை செய்கிறேனாம். ஏன் செய்யக்கூடாது!

இது டெலிபோன்மூலம் சோமு என்னிடம் சரசமாடிக்கண்ட பலன்! சோமுவுக்கு என்போக்கு, உள்ளேசுவாலையைக் கிளப்பிவிடுமல்லவா! கடைசியில் ஒரு நாள் வீட்டிற்குவந்து வலியப்பேசத் தொடங்கினான்.

"காந்தா, என்னைச்சற்று நம்பு. நான், முன்புசெய்தது தவறு. உன்னை நான் கொடுமைப்படுத்தினேன்

## ஏசண்டுகளுக்கு வேண்டுகோள்

அன்புடையீர்,

காகிதவிலை கஞ்செனை ஏறி விற்பதற்குக் காரணமாகவுள்ள போர் நெருக்கடியான இந்நாளில், புதிதாகத் துவக்கி நடத்தப்பட்டு வரும் நமது பத்திரிகை வளர்ச்சிப் பெருக்கம் அடையவேண்டுமானால், தாங்கள் அந்தந்த மாதத்துக் கணக்குகளைப் பாக்கியில்லாமல் உடனுக்குடன் அனுப்பிவைத்தாலொழிய முடியாது. எனவே, பத்திரிகைக்கு இன்னும் மிகுதியான சந்தாதார்களைச் சேர்ப்பதோடு, அந்தந்த மாசக்கணக்குகளைப் பாக்கியில்லாமல் உடனுக்குடன் அனுப்பி உதவுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேசர்.

## கிருஷ்ணகிரியில் மாணவர் மாநாடு.

13-6-42ல் கிருஷ்ணகிரியில், தாலுக்கா மாணவர் மாநாடு தோழர் S. சோமசுந்தர பாரதியார், M. A. B. L. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அவ்வமயம் தோழர்கள் T. J. ஜார்ஜ் M. A. அவர்களும் லலிதா அண்ணாஜி அவர்களும் முறையே மாநாட்டைத் திறந்தும் கொடியேற்றியும் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

## திருநெல்வேலி மாவட்ட 2-வது நீதிக்கட்சி மாநாடு.

கோவில்பட்டியில் (14-6-42) நடைபெறும்.

தலைவர்: ராவ்பகதூர்,
N. R. சாமியப்பா அவர்கள்,

திறப்பாளர்:
ஊ. பு. ஆ. சவுந்தர பாண்டியன்,
அவர்கள்,

### படத்திறப்பு.

"திராவிட நாடு"
பெரியார் ஈ. வெ. இராமசாமி,
"பெரியார்"
K. V. அழகிரிசாமி,
"செல்வம்"
C. N. அண்ணாதுரை, M. A.,
"ஜின்னா"
K. A. P. விசுவநாதம்,

இன்னும் பல தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்வார்கள்.

அதை மறந்துவிடு. இப்போது நான் மனமார நேசிக்கிறேன்.

நேசியுங்களேன். அதில் என்ன தப்பு. யார் வேண்டாமென்றார்கள்.

இவ்வளவு வெறுப்பாகப் பேசாதே காந்தா, வேலால் புண்ணைக் குத்துவது போல் இருக்கிறது.

என்னை என்னசெய்யச் சொல்கிறீர்.

என்ன செய்வதா? என்மீது அந்தக் கடுமையான பார்வையைச் செலுத்தாதே. பழைய காந்தாவாக இல்லையே நீ.

பழைய காந்தாவும், புதுக் காந்தாவும், இது என்ன பித்தம்.?

பித்தந் தான். ஆனால் அதற்கு நீதான் காரணம்.

நானா?

ஆமாம்! என்னை நீ இன்னமும் வாட்டாதே. நீ இனி இப்படியே நடந்து கொண்டால், நான் தற்கொலை செய்து கொள்வேன். அந்தக்காலத்தில், நீயாக என்னை மணம் செய்து கொள்ள விரும்பியபோது, நான் முட்டாள் தனமாக மறுத்து விட்டேன். வாழ்வைப் பாழாக்கிக் கொண்டேன். உன்னை இங்கு கண்டது முதல், என் மனம் ஒரு நிலையில் இல்லை;

இதுசகசம் கொஞ்ச நாளில் சரியாகி விடும்.

காதகி, பாதகி, போக்கிரி என்று கூறிக்கொண்டே சோமு என் கன்னத்தில் அடித்தார். நான்கோபித்துக் கொள்ள வில்லை. சிரித்தேன். அவருடைய மனதில் எரியும் வேதனையில் என்சிரிப்பு எண்ணெய் வார்த்தது போலிருந்தது. தலைகால் தெரியாமல், என்மீது மோகங் கொண்டுவிட்டார். அவரது ஆசை நிறைவேறு முன்னம், அவர், எவ்வளவு படவேண்டுமோ அவ்வளவும் பட்டுத்தான் ஆகவேண்டும். பழிவாங்காது விடக் கூடாது என்று தான் எனக்குத் தோன்றிற்று. அந்த எண்ணம் எனக்கு உண்டானதில் ஆச்சரியமுண்டா?

(தொடரும்)

**இந்துமதமுந் தமிழரும்** (3-ம் பக்கத் தொடர்ச்சி)

வாங்கியதும் ஒவ்வொரு பக்கமாய்த் திருப்பிக் கொண்டே போய்த் தலையங்கம் எழுதியிருக்கும் பக்கத்திற்கு வந்து, **தர்மகர்த்தா உத்தியோகம்!** என்ற துணைத் தலையங்கத்தைப் படித்தார். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது தெரியுமா?.

> "ஒரு தேசத்தை மற்றொரு தேசத்தார் ஆளுவதற்குக் கூறப்படும் விசித்திரமான காரணம்: கடவுளின் சார்பாகத் தர்மகர்த்தாவாக இருந்து அந்தத் தேசத்தை ஆளுகிறார்களாம். **கடவுளை எந்த இடத்தில் இவர்கள் சந்தித்தார்கள்; கடவுள் வாயினால் அதிகாரம் கொடுத்தாரா; அல்லது எழுத்து மூலமாகக் கொடுத்தாரா?** என்ற விஷயங்கள் யாருக்கும் தெரியாது. இது இப்பொழுது நடை பெற்றுவரும் ஏமாற்று."

என்று படித்ததும் அந்தக் காங்கிரசன்பர் ஒன்றும் பேசாமல் நடையைக் கட்டி விட்டார். இதுவும் காலவேற்றுமைதான் என்று மற்றும் அங்கு நின்றவர்கள் சொல்லிக்கொண்டே போனார்கள். இந்தத் தினமணிக்கு இப்படியுமா புத்தி கடுமாறும் என்று இயம்பிய வண்ணம் போயினர் ஒரு சிலர்.

அன்பர்களே! 'தினமணி' என்ற செய்தித்தாள் ஆரிய ஆதிக்கம் ஒன்றையே தனது குறிக்கோளாகக் கொண்டு வேலை செய்துவந்த போதிலும், அதன் ஆசிரியர் ஒரு தமிழனாய் இருப்பதால், தமிழ் மக்கள் செய்துவரும் பகுத்தறிவுக் கிளர்ச்சியின் வேகம் எந்தத் தமிழனையும் தட்டி எழுப்பிவிடும்; அதனால், தமிழர்கள் என்றைக்காவது ஒருநாள் ஒன்றுபட்டுத் தன் மதிப்பியக்கத் தோழர்களாவார்கள் என்பதை அறிவுறுத்தவே, இந்து மதமுந் தமிழரும் என்ற தலைப்பில் இச்செய்தியையும் நுழைத்தேன். (தொடரும்)

# தமிழ்த்தாய் வாழ்த்து.

**பாரதிதாசன்.**

(பூமியில் மானிட' என்ற மெட்டு)

1. வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே!
மாண்புகள் நீயே என்தமிழ்த் தாயே!
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே!
வீரரின் வீரமும் வெற்றியும் நீயே.

2. தாழ்ந்திடும் நிலையினில் உனைவிடுப் பேனா?
தமிழன் எந்நாளும் தலைகுனி வேனா?
சூழ்ந்தின்பம் பாலிக்கும் பைந்தமிழ் அன்னாய்
தோன்றுடல் உயிர்தனை இகழுதல் ஏனோ?

3. செந்தமிழே உயிரே நறுந் தேனே,
செயலினை மூச்சினை உனக்களித் தேனே,
நைந்தா யெனில்நைந்து போகுமென் வாழ்வு!
நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே.

4. முந்திய நாளினில் அறிவும் இலாது
மொய்த்த நன்மனிதராம் புதுப்புனல் மீது
செந்தா மரைக்காடு பூத்தது போலே
செழித்த என்தமிழே, ஒளியே, வாழி!

பாகிஸ்தான். (2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் அறிக்கையைக் கண்டால்போதும், பாகிஸ்தான் பிரிட்டிஷ் சிருஷ்டி அல்ல என்பதைத் தெரிந்துகொள்ள. இந்த என் அறிக்கை, வீணாகவளர்ந்துள்ள தப்பெண்ணத்தைப் போக்குமென்று நம்புகிறேன்.

இந்தக்கடிதத்தை என் வாழ்த்துடன், அன்பருக்கு அனுப்பவும். இங்ஙனம்,

**காமிலி ஹ்யூஸ்மான்ஸ்.**

* * * *

இருபத்திநாலாண்டுகளுக்கு முன்பு, அலைகடல்கள் தாண்டி, ஐரோப்பாக்கண்டத்திலே, அறிஞர்கள் முன்னிலையில், பாகிஸ்தான் திட்டத்தைப் பிரேரேபித்த இருமுஸ்லீம் வீரர்களில் ஒருவர்தான், ஜனாப் அப்துஸ் சத்தாரி கெயிரி! அவரேதான், ஜனாப் ஜின்னாவின்மீது காங்கிரசார் சுமத்தும் வீண்பழியைக்கண்டு மனம் துடித்து, உண்மை வெளிவரட்டும் என்பதற்காக, மிஸ்டர் அட்லிக்கும் காமிலி ஹ்யூஸ்மான்சுக்கும் கடிதமெழுதினார். ஸ்டாக்கோமில் சர்வதேச சமதர்மிகள் மாநாட்டில் 1917ல் பிரேரேபிக்கப்பட்ட பாகிஸ்தானை இன்னமும் எதிர்க்கவும், அது பிரிட்டிஷ் சூழ்ச்சி என்றுரைக்கவும் முன்வரும் மரமண்டைகளுக்கு இந்தச் செய்தியை, மெள்ள மெள்ளவாகிலும் விளக்கிக் கூறுங்கள் தோழர்களே! யாரோ ஒருசாயபு, கொரானிலே பாகிஸ்தானுக்கு ஆதாரம் இல்லை என்றுரைத்தாராம், அவருக்குக்கூறுங்கள், அவரைவிடதெளிவாக கொரானையும்படித்து, இஸ்லாத்தையும் உணர்ந்து முஸ்லீம்இன முன்னேற்றத்திலே அக்கரையுங்கொண்ட அறிஞர்கள்கூறும் ஆதாரம், பாகிஸ்தான், என்பதை!

இருவிழிகளும் கெட்டு, இஸ்லாமியரின் எழில் குன்றிவிட்டதே என்பதனால் மனஅமைதியுங்கெட்டு, பட்டுவரும் மரம்போல் இருந்த ஷா ஆலம், அதற்கு முன்பிருந்த அ வ ர து மூதாதையர், முடிதரித்துச் ஜொலித்ததை எண்ணி, "எவ்வளவு உச்சியில் இருந்தது பிறைக்கொடி! எவ்வளவு கீழே தாழ்ந்துவிட்டது இன்று" என்று ஏங்கி, தூங்குகையில் கனவுகண்டு கலங்கியிருப்பாரன்றோ. அதுபோல், ஷா ஆலமும் இன்றில்லை, ஆளும் இடமே இல்லையே என்று இன்று எட்டுக்கோடிக்கு மேற்பட்ட இஸ்லாமியத் தோழர்கள் ஏங்கித்தவிக்கின்றனர். இதனைஅறியாது, பாகிஸ்தான் திட்டத்தை எதிர்ப்பதுபேதைமை, பாதகம், அறிவீனம், ஆணவம்! இந்தக் கெட்ட குணங்களின் கூட்டுச் சரக்குவெகுவிரைவிலே குப்பைக்கூடைக்குச்சென்றே தீரும், இதிலே சந்தேகம் வேண்டாம். இந்துக்கள் வேறு, முஸ்லீம்கள் வேறு என்ற கருத்தே காந்தியாருக்குக் கசக்கிறதாம்! இருவரும் ஒரே இனமாம்! உண்மையிலேயே இக்கருத்து, காந்தியாருக்கு இருக்குமேயானால், அவரது முதல்புதல்வன் ஹீராலால்காந்தி, இஸ்லாம் புகுந்தபோது, ஏன் அவ்வளவு கொதித்தார், குதித்தார், குளறினார்! இஸ்லாமியரானதும், ஏன் காந்தியார், காயவேண்டும். இஸ்லாமியர்மீது எவ்வளவு துவேஷமும், வெறுப்பும், கோபமும் இருந்தால், தன் மகன், முஸ்லீம் மார்க்கத்தைத் தழுவியதும் காந்தியார் தத்தோம் என்றாடி, தகாது, கூடாது என்று எதிர்த்திருப்பார் என்பதை எண்ணிப் பாருங்கள். இந்துவும் முஸ்லீமும் ஒரே இனமானால், ஏன், வடநாடு, இந்துமுஸ்லீம் கலக இரணகளமாக இருக்கிறது? ஏன் இன்றும், இந்து உணவுச்சாலைகளிலே முஸ்லீம் வடநாட்டிலே நுழையமுடிவதில்லை? ஏன் இன்றுவரை, ரயில்வே நிலையங்களிலே, இந்துசா (டீ) முஸ்லீம்சா (டீ) என்று தனித்தனியாக விற்கப்படுகிறது! இந்துப்பானி (தண்ணீர்) முஸ்லீம் பானி (தண்ணீர்) என்றுஏன் தண்ணீர் தருவதிலேகூடப் பேதம் காட்டப்படுகிறது? இந்தக் "கண்கண்டகடவுள்" "அரையாடைஅண்ணல்" "அந்தராத்மாவின் அன்பர்" "முனிபுங்கவர்" வாழும் வார்தாவிலே, இந்த வக்கிரபுத்தி காட்டுகிறார்களே, அதுஏன்? இவைகளைக் கேட்டால், பதில்கூற வக்குஇல்லை! இந்தக் கேவலமான கோளாறுகளைப் போக்க முன்வரத்துணிவில்லை. மௌலானா அசாத் காங்கிரஸ் தலைவராகியும் இந்த மோசமான பேதம் போக்கச் சிறுவிரல் அசைக்க ஆள்இல்லை! இவ்வளவு பேதங்கள் இருக்கும்போது, இரு இனங்களுக்கும் தனித்தனி இடம் தேவை என்று கூறும்போதுமட்டும், இந்துவும் முஸ்லீமும் வேறல்ல என்று வெட்டிப்பேச்சு பேசுவானேன்? இதிலே ஏதாவது நாணயமிருக்கிறதாஎன்று கேட்கிறேன். காந்தியாரின் கைவிரல் ஆடினால், பாரதமாதாஅங்கம் எங்கும் ஆனந்தம்பொங்கஆடுமாமே, அத்தகைய அதிகாரம் பெற்றுள்ள காந்தியார், ஏன்இந்தப் பேதத்தைப்போக்கமுன்வரவில்லை.கையாலாகவில்லையா! கருத்து இல்லையா! ஏனய்யா, என்றால் இந்துமுஸ்லீம் ஒற்றுமையை ஏற்படுத்தமுடியவில்லை என்று இருகையை விரித்துக் கூறிவிட்டவர், இன்னமும், இந்துவும், முஸ்லீமும் வேறுஅல்ல என்று கூறுகிறார், இது பொருந்துமா என்றுதான் கேட்கிறேன். இந்துவும் முஸ்லீமும் ஒன்றாக வாழவேண்டும் என்பதற்காக, **அக்பர்** எவ்வளவோ அரும்பாடு பட்டார். ரஜபுத்திரமணிகளை மணஞ்செய்து கொண்டதுமட்டுமல்ல, ரஜபுத்திர வீரர்களுக்கு, தர்பாரில், பலப்பல பொறுப்பான பதவிகள் தந்தார், படைத்தலைவர்களாக்கினார். கண்டபலன் என்ன? மொகலாய மன்னர்கள் சற்றுச் சோர்ந்து களைத்து உட்கார்ந்தால்போதும், இந்து சிற்றரசர்களும், சீமான்களும், மதாசிரியர்களும் கிளம்பி, கலகம் குழப்பம் விளைவித்து, மொகலாய அரசைக் கவிழ்க்கவே முயற்சித்து வந்தனர். இராமதாசர் என்ற பார்ப்பன குரு, சிவாஜி என்ற மராட்டிய மன்னரை மொகலாயர்மீது ஏவியது ஏன்? முஸ்லீம் அரசு கவிழ்ந்தால், ஆரிய அரசு ஏற்படும், ஆரியஅரசு ஏற்படின், பூசுரர், பூரிப்போடு வாழமுடியும் என்ற காரணத்தினால் அல்லவா? உபநிஷத், வேதம், புராணம், ஆகியவைகளை ஆதரித்த அக்பர் காலத்திலும், அந்த அரசைக் கவிழ்க்க எத்தனை சூதுகள் நடத்தினர் இந்துக்கள்! ஆங்கில ஆட்சி ஏற்பட்டதும், இந்துக்கள் அந்த நிழலின்கீழ் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டத்தானே பாடுபட்டு வந்தார்கள்—வருகிறார்கள். சவர்க்கார் கூட்டம், முஸ்லீம்களை எவ்வளவோ தூற்றிக்கொண்டு வருகிறதே, காந்தியார், ஒருவார்த்தை அதைத்தடுக்கக் கூறினாரா! ஏன், பாமரரைப்பதைக்க வைக்கும் பாதகக் கூட்டத்தைக் காந்தியார் தட்டிக்கொடுக்கிறார். இவைகளைக்கேட்டால், கோபம் பொத்துக்கொண்டு வருகிறது. ஆகவேதான், இனி இத்தகைய ஆட்சியிலே இருக்கமுடியாது என்று முஸ்லீம்கள் கூறிவிட்டனர். ஏன் அதை எதிர்க்கிறார்கள்? எதிர்த்து இந்த ஏமாளிகள் காணப்போவதென்ன! இந்துக்கூட்டமோ, எண்ணாயிரம்பிளவு, ஏழாயிரம் இழிவுகளைத்தாங்கிக்கொண்டுபலப்பலவகுப்பு,வகுப்புக்குள் வகுப்பு, பலகுலம், என்று சின்னாபின்னமாகி இருக்கிறது. இந்துமார்க்கமோ, இன்னதென்று வரையறுத்துக் கூறமுடியாத குப்பைமேடு! அதிலே நெளிகின்றன புராணங்கள் எனும் புழுக்கள்! இந்தக்கூட்டம், ஏகதெய்வம், ஒரேநபி, ஒரே கொரான்கொண்டு, மேட்டுப்பாளையத்திலே இருந்தாலும் மெக்காவில் இருந்தாலும் ஒரே ஒற்றுமையுடன் விளங்கும் வீரக் கூட்டமான இஸ்லாமியரையா எதிர்க்கமுடியும்! முயல் கூட்டங்கள் முகாமிட்டு புலிக்கூட்டத்தைப் போருக்கழைப்பதுபோன்றதன்றோ இது. நாட்டின்நிலைமையை நன்குணரின், இத்தகைய நினைப்புகளைக் கைவிட்டு, நாட்டிலே உள்ள வீரமரபினரின் விரோதத்தைக்கிளப்பாமல் ஆரியர் இருப்பர். இன்றும் ஏதோ தங்களின் சூதும் வாதும் சூழ்ச்சியும் செல்லுபடியாகும் என்று கருதினால் ஏமாற்றமே அடைவர். வீரஇனங்களாகிய இஸ்லாமியரும் திராவிடரும் விழித்துக்கொண்டனர்,

இனி அவர்கள் தமது இலட்சியத்தைப் பெறும்வரை ஓயமாட்டார்கள். கடல்அலையைக் கைத்தடி கொண்டு தாக்கியவன், கதைபோல், காங்கிரசார், தமது பத்திரிகைகளைக்கொண்டு, வீரமரபினர் கோரும் விடுதலையின் உணர்ச்சியைத்தாக்கமுயலுகின்றனர். அலையை அடித்து கைச்சலிப்புமட்டுமேகாண முடியும். அதேதான் இங்கும். ஆகவே ஆரியத்தோழர்களே, அசகாயசூரரென உங்களை மக்கள் நம்பி நாசமானகாலம் மலையேறிவிட்டது. இனி உமது நயவஞ்சகம் பலிக்காது. இனிச்செல்லாது உமது செல்லரித்த சாத்திரங்கள்! விலகிநில்லுங்கள், விடுதலைப்போர் கிளம்பிவிட்டது! பந்திக்கு முந்துவீர், படை எனிலோ பயந்தோடுவீர், சூதுசெய்யவல்லீர், சூரர் எதிர்ப்படின் சுலோகமுரைக்க அறிவீரேயன்றி சூளுரைக்கவுமறியீர். என்வீணில், நெருப்புடன் விளையாடுகிறீர், என்று ,நான் எச்சரிக்கிறேன்.

சிறைச்சாலையிலே இருந்து சிலர்கள் வெளியிட்ட உண்மை, பாகிஸ்தான் என்ற கருத்து 24 ஆண்டுகளுக்கு முன்பே பிறந்தது என்பதை விளக்கிவிட்டது. இன்று அந்தப்போர்வீரன், 24 வயதுள்ள வாலிபன், வெளியே வருகிறான், வீறுகொண்டு! அவன் கண்டது என்னை? எங்கும் முஸ்லீம்களின் உணர்ச்சி! அந்த வீரவாலிபனைக் கைலாகு கொடுத்து வரவேற்று, 'ஆற்றல்படைத்த தோளுடைய அருமைத் தோழா! அஞ்சாநெஞ்சுபடைத்த குமாரா! பஞ்சாபும் சிந்தும், எல்லையும் வங்கமும், எங்கும் உனது எழிலாட்சி எழச்செய்வேன்,'' என்று ஜனாப் ஜின்னா கூறிவிட்டார்.

"இதோ காணீர் உமது ரட்சகனை! கேளீர் இவன் புகழை! இவன் கோரி, கில்ஜி, லோடி, சையத், மொகல், ஆகிய நமது பரம்பரையிலுதித்தவன்! பாராளும் திறம்படைத்தவன்! படைக்கஞ்சான், பயங்கொள்ளான், பச்சை இரத்தம் பரிமாறவும் தயங்கமாட்டான். இந்தப்பாகிஸ்தான் வீரனுக்கு உமது வணக்கத்தைக் கூறுவீர்'' என்று ஜனாப் ஜின்னா, முஸ்லீம்களுக்குக் கூறிவிட்டார். முஸ்லீம்களும், தமது கனவு நனவு ஆகும் காலம் பிறந்துவிட்டதென்று களித்து, தோள் தட்டி, கச்சையை வரிந்து கட்டிக்கிளம்பத் தயாராகி விட்டனர்! ஆரியனே நீ தயாரா போருக்கு? முடியுமா உன்னால்! உன்சரிதத்திலே உண்டா, வீரத்துக்குச்சான்று. கிடையாது! முடியாது! எனவே,! உன் நிலையை உணர்ந்து சற்றே விலகியிரும் பிள்ளாய், என்று ஆரியருக்கு நான் அறிவுறுத்துகிறேன். கேட்டால் பிழைப்பர், இல்லையேல் கெடுவர். இரண்டில் எது தேவையோ அதை அவர்கள் கேட்கட்டும்!

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

பொள்ளாச்சி,

P. N. இராமானுசம் இயற்றிய,

"திராவிடப் போர் முரசு"

—oX—

சரித்திரச் சான்றுகளுடன் கூடிய ஆராய்ச்சி நூல். பண்டைய தமிழகத்தின் பெருமையையும், ஆரியர்களின் பூர்வீக—தற்கால வாழ்க்கை வரலாறுகளையும், திராவிடநாடு சீரழிந்து சிதைந்த காட்சியையும், திராவிட நாடு பிரிக்கப்படவேண்டிய அவசியத்தையும், அதற்கு வேண்டிய சான்றுகளையும், இன்றைய திராவிட மக்களின் இழிநிலையைப் போக்க வழியையும், ஆரியத்தால் நாம் அடைந்த அவதியையும், மிக விரிவாக ஆதாரங்களுடன் விளக்கி வரையப்பட்ட உயரிய நூல். 115பக்கங்கள்கொண்டது. தலைவர்களின் 15-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இவ்வரிய நூலின் விலை அணா 5.

வெளியிடுவோர்: கிடைக்குமிடம்.

பெரியார் வாலிபர் சங்கம், பொள்ளாச்சி.

## தமிழ்த் திருமணம்.

தோழர் கா. மு. துரைசாமி நாயகர் திருக்குமாரி செல்வி சரஸ்வதி யம்மாளுக்கும். செல்வன் N. சுப்பிரமணியனுக்கும். 3—6—42 காலை சென்னைப்புலவர் தோழர் மே வி வேணுகோபாலப்பிள்ளை அவர்கள் தலைமையில், தோழர் மாணிக்க நாயகர் அவர்களால் தமிழ்த்திருமணம் நடத்திவைக்கப்பட்டது தோழர்கள் A. பாலகிருஷ்ண முதலியார், செ. கோவிந்தராசு முதலியார், கவுன்சிலர் தானப்ப நாயகர், A. K. தங்கவேல் முதலியார், மாஜி கவுன்சிலர் இராசகோபால், உள்ளிட்ட பல பிரமுகர்கள் வந்திருந்தனர். திருமணக் கருதது சீர்திருத்த நோக்கம் ஆகியவைகளைவிளக்கி. தோழர்கள் வேணுகோபால் பிள்ளை, காஞ்சி கலியாணசுந்தரன், A. K. தங்கவேலர், C. N. அண்ணாதுரை ஆகியோர் சொற்பொழி வாற்றினர். தோழர் கா. மு துரைசாமி அவர்கள் வந்தனங்கூற. நிகழ்ச்சி இனிது நிறைவேறியது. திராவிட நாடு பத்திரிகை வளர்ச்சிக்காக ஒரு ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

## சீர்திருத்தத் திருமணம்.

25—5—42ந்தேதி திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு விருதுநகர் P. U. T. சின்னமணி நாடார் மகனும். திராவிடத்தொண்டர்படைத் தலைவருமான, ராஜப்பர் அவர்களுக்கும், சென்னம்பட்டி ம. ப. பண்டார நாடார் மகள் சண்முக வடிவு அம்மாளுக்கும். R. அண்ணாமலை அவர்கள் தலைமையில் ஓர் சீர்திருத்தத் திருமணம் மணமகள் இல்லத்தில் நடைபெற்றது. அதுசமயம் விருதுநகர் திராவிடத்தொண்டர் படையின் சார்பாக ஓர் வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. மற்றும்பல தோழர்களும் வாசித்தளித்தனர். மணமகள் தொண்டர்படைக்கு நன்கொடையாக ரூ. 10—0—0ம் திராவிட நாடு பத்திரிகைக்கு ரூ 2—0—0ம் அளித்தார். பலதோழர்களிடம் இருந்து வாழ்த்துத் தந்திகளும் கடிதங்களும் வந்தன.

Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M. A. at 51 Nimanthakara Street, L. Conjeeveram.